


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்
# பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY




சென்னை மலர்: 01 இதழ்: 258 30.04.2026 வியாழக்கிழமை
Chennai Volume: 01 Issue: 258 Thursday pages 8 Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

## இன்றைய நாள்

வியாழக்கிழமை
(30–04–2026)
பராபவ ஆண்டு, சித்திரை-17
பிறை: வளர்பிறை
திதி
சதுர்த்தசி இரவு 9.50 வரை பிறகு பௌர்ணமி
நட்சத்திரம்:
சித்திரை பின்னிரவு 2.41 வரை பிறகு சுவாதி.
யோகம்
சித்த/அமிர்தயோகம்
ராகுகாலம்
1.30–3.00 மணி.
எமகண்டம்
காலை 6.00–7.30 மணி
சூலம் – தெற்கு
நல்ல நேரம் :
காலை 9–10 மணி.
மாலை 4–5 மணி.

மேஷம் .................உயர்வு
ரிஷபம்.................... நன்மை
மிதுனம் .............நற்செயல்
கடகம்................. ஆதாயம்
சிம்மம் .......................சுகம்
கன்னி ................. ..மாற்றம்
துலாம் ................. ஆர்வம்
விருச்சிகம்........ பொறுமை
தனுசு................ பொறுப்பு
மகரம் ...................முயற்சி
கும்பம்...................... நட்பு
மீனம்........................ புகழ்

# மேற்கு வங்க இறுதிக் கட்டத் தேர்தல்: 89.99% வாக்குப்பதிவு

## மக்கள் ஆர்வத்துடன் வரிசையில் நின்று வாக்களித்தனர்

**கொல்கத்தா, ஏப்.30:**

மேற்கு வங்கத்தில் இரண்டாம் கட்ட சட்டப்பேரவைத் தேர்தலில் மாலை 5 மணி நிலவரத்தை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், பிற்பகல் 3 மணி நிலவரப்படி 78.68 சதவிகித வாக்குகள் பதிவான நிலையில்,மாலை 5 மணி நிலவரப்படி 89.99 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளனன.

அதிகபட்சமாக, கிழக்கு பர்தமான் தொகுதியில் 92.46 சதவிகிதமும், ஹூக்ளியில் 90.34 சதவிகிதமும், நாடியா தொகுதியில் 90.28 சதவிகிதமும், ஹவுரத் தொகுதியில் 89.44 சதவிகிதமும், வடக்கு கொல்கத்தாவில் 87.77 சதவிகிதமும், தெற்கு கொல்கத்தாவில் 86.11 சதவிகிதமும் பதிவாகியுள்ளன.

294 சட்டப்பேரவைத் தொகுதிகளைக் கொண்ட மேற்கு வங்கத்தில் முதல்கட்டமாக 152 தொகுதிகளுக்கு கடந்த ஏப்.23 ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது.முன்னெப்போதும் இல்லாத அளவில் 93.19 சதவிகித வாக்குகள் பதிவாகின.



இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டமாக 142 தொகுதிகளுக்கு இன்று காலை வாக்குப்பதிவு தொடங்கியது. இந்தத் தேர்தலில் 1.64 கோடி ஆண்கள், 1.57 கோடி பெண்கள், 792 மூன்றாம் பாலினத்தவர் என 3.21 கோடி பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வாக்குப்பதிவுக்காக 41,001 வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன..

"சில குறிப்பிட்ட பகுதிகளில் நிகழ்ந்த சிறிய அளவிலான சம்பவங்களைத் தவிர்த்து, மற்ற இடங்களில் வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று வருகிறது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து நாங்கள் அறிக்கைகளைக் கோரியுள்ளோம்," என்று தேர்தல் ஆணைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வாக்குப்பதிவின் தொடக்க நேரங்களில், மேற்கு வங்கத்தின் சாப்ரா, சாந்திப்பூர், நிம்தலா மற்றும் பாங்கர் உள்ளிட்ட பல இடங்களில் வன்முறை மற்றும் நாசவேலைச் சம்பவங்கள் நடந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்கு வங்க சட்டப் பேரவைக்கு இறுதிக் கட்ட தேர்தல் நடைபெற்று வருகிறது. 142 தொகுதிகளில் இன்று காலை 7 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்கியது.

மக்கள் ஆர்வத்துடன் வரிசையில் நின்று வாக்களித்தனர். வாக்குச்சாவடிகளில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப் பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் முதல் மற்றும் இரண்டாவது கட்டமாக நேற்று பதிவான வாக்குகள் மே 4 ஆம் தேதி எண்ணப்படுகிறது.

# தமிழ்நாட்டில் தினசரி மின் பயன்பாடு 21,211 மெகாவாட்டாக அதிகரிப்பு

**சென்னை, ஏப்.30:**

தமிழகத்தில் உள்ள வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு தேவையான மின்சாரம் அனல் மின்சார உற்பத்தி நிலையம், நீர், கியாஸ் மற்றும் அணுமின்சார நிலையம், சீசன் காலங்களில் காற்றாலை, சூரிய சக்தி மூலமும் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வினியோகம் செய்யப்படுகிறது.


மத்திய தொகுப்பில் இருந்து சராசரியாக 6 ஆயி ரத்து 500 மெகாவாட் மின்சாரமும் வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்திற்கு வழக்கமாக 16 ஆயிரம் மெகாவாட்டாக இருந்த தினசரி மின்சார தேவை, கோடை காரணமாக 21 ஆயிரம் மெகாவாட் வரை உயரக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது. அதுவும் அடுத்த மாதம் மே மாதம் எட்டக்கூடும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில், தமிழ்நாட்டில் நேற்றைய (28-ந்தேதி) மின் தேவை 21,211 மெகாவாட்டாக இருந்ததாக மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளார். அனல் மின் நிலையம், காற்றாலை, சோலார் வாயிலாக நேற்று 6,915 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

மத்திய தொகுப்பு மற்றும் தனியாரிடம் இருந்து 14,296 மெகாவாட் மின்சாரத்தை மின்வாரியம் வாங்கியுள்ளது. நேற்று ஒரே நாளில் 462.76 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக மின்சார வாரியம் தெரிவித்துள்ளது.

தென்னிந்திய மாநிலங்களிலேயே தமிழகத்தில் தான் மின்சாரத்தின் தேவை அதிகமாக உள்ளது. கடந்த மார்ச் மாதத்துடன் ஒப்பிடும்போது மின்சாரத்தின் தேவை 19 ஆயிரத்து 679 மெகா வாட்டிலிருந்து 19 ஆயிரத்து 822 மெகாவாட்டாக மிதமாக உயர்ந்துள்ளது. தற்போது கோடை வெயில் முன்கூட்டியே தொடங்கியுள்ளதாலும், தொழில்துறை வளர்ச்சியாலும், அடுத்த மாதங்களில் (மே மாதம்) மின்சார தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளதாக மத்திய மின்சார துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. மே மாதத்தில் காற்றாலை மின்சார உற்பத்தி தொடங்குவதால், மின்சார தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என்றும், இது தவறான தகவல் என்றும் சில தரப்பில் கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அக்னி நட்சத்திர காலத்தில் மின்சாரத்தின் தேவை இன்னும் அதிகரிக்கும் என்பதால், மின்சார வெட்டு தொடர்பான அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

# வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடும் 1,005 பணியாளர்கள் முதற்கட்டமாக குலுக்கல் முறையில் தேர்வு



**சென்னை, ஏப்.30:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த 23-ம் தேதி நடைபெற் றது. இதில், சென்னை மாவட்டத்தில் ஆர்.கே.நகர், திரு.வி.க.நகர், ராயபுரம், துறைமுகம் மற்றும் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி ஆகிய தொகுதிகளின் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ராணி மேரி கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தில் வைக்கப் பட்டுள்ளன.

பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர், ஆயிரம் விளக்கு, அண்ணாநகர் தொகுதிகளின் வாக்குப்பதிவு இயந்திரங்கள் லயோலா கல்லூரிவாக்கு எண்ணும் மையத்திலும், விருகம்பாக்கம், சைதை, தியாகராயநகர், மயிலாப்பூர், வேளச்சேரி ஆகிய தொகுதிகளின் இயந்திரங்கள் அண்ணா பல்கலைக்கழக வாக்கு எண்ணும் மையத்திலும் உள்ள பாதுகாப்பு அறைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

மே 4-ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளதை முன்னிட்டு, வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட உள்ள வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள், நுண் பார்வையாளர்கள் என மொத்தம் 1,005 நபர்களை முதற் கட்ட மாக சட் டப்பேரவை தொகுதி வாரியாக கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்யும் பணிரிப்பன் கட்டிட வளாகத்தில் நேற்று நடைபெற்றது. மாவட்ட தேர்தல் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான ஜெ.குமரகுருபரன் தலைமையில் இக்கூட்டம் நடந்தது. வாக்கு எண்ணிக்கை மையங்களில் மேற்கொள்ள வேண்டிய நடை முறைகள் தொடர்பாக பல்வேறு ஆலோசனை, அறிவுரைகளை அவர் வழங்கினார்.

# மே 3-ம் தேதி தூத்துக்குடியில் 5 மையங்களில் நீட் தேர்வு

**தூத்துக்குடி, ஏப்.30:**

நாடுமுழுவதும்மே3-ம்தேதி நடைபெறவுள்ள இளநிலை மருத்துவப் படிப்பிற்கான நீட் நுழைவுத்தேர்வையொட்டி, தூத்துக்குடி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு தலைமை தாங்கிய மாவட்ட கலெக்டர் விஷு மகாஜன் கூறியதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் எட்டயபுரம் பாரதியார் நூற்றாண்டு நினைவு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி (480 பேர்), கோவில்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (480 பேர்), தூத்துக்குடி புனித லசால் மேல்நிலைப்பள்ளி (240 பேர்), அரசு பாலிடெக்னிக் கல்லூரி (288 பேர்), தூய மரியன்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி (480 பேர்) என 5 மையங்களில் மொத்தம் 1,968 மாணவ, மாணவியர் நீட் தேர்வு எழுத உள்ளனர்.

மாணவர்கள் தேர்வு மையங்களுக்கு சிரமமின்றி சென்று வர ஏதுவாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் கூடுதல் சிறப்புப் பேருந்துகளை இயக்க கலெக்டர் உத்தரவிட்டுள்ளார். மேலும் தேர்வு மையங்களில் தடையற்ற மின்சாரம் வழங்க மின்சார வாரியத்திற்கும், பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள காவல் துறைக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# மதுரை மீனாட்சியம்மன் கோயில் சித்திரை திருவிழா: தேரோட்டம் கோலாகலம்

**மதுரை, ஏப்.30:**

மதுரை மீனாட்சியம்மன் கோயில் சித்திரை திருவிழா திருத்தேரோட்டம், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்து இழுக்க வெகுவிமரிசையாக தொடங்கியது.

உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் சித்திரை திருவிழா ஏப்ரல் 19 -ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவை முன்னிட்டு தினமும் காலை, மாலை வேளைகளில் சுவாமி-அம்மன் பல்வேறு வாகனங்களில் வீதி உலா வந்தனர்.



விழாவின் பத்தாம் நாளான நேற்று மீனாட்சி - சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் கோலாகலமாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து விழாவின் 11ம் நாளான இன்று காலை திருத்தேரோட்டம் வெகு விமரிசையாக தொடங்கியது.


திருத்தேரோட்டத்தை முன்னிட்டு மீனாட்சி அம்மனும், பிரியாவிடை சுந்தரேஸ்வரரும் காலை 8 மணி அளவில் கோயிலில் இருந்து புறப்பாடாகி கீழமாசி வீதியில் தேரடி பகுதியில் எழுந்தருளினர். அலங்கரிக்கப்பட்ட பிரமாண்டமான பெரிய தேரில் பிரியாவிடை சுந்தரேசுவரர், சிறிய தேரில் மீனாட்சி அம்மனும் எழுந்தருளினர். காலை 6.30 மணிக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் 'ஹர ஹர சங்கர மீனாட்சி சுந்தரர்' என்ற பக்தி முழக்கத்தோடு சுவாமி, அம்மன் தேர்களை வடம்பிடித்து இழுக்க தொடங்கினர். சிவ பக்தர்கள் ருத்ராட்சையால் ஆன சிவ லிங்கத்தை தோளில் சுமந்தபடியும், பெண் பக்தர்கள் கயிலாய வாத்தியங்கள், சங்குகளை ஊதியபடியும் திருத்தேரின் முன்பாக சென்றனர்.


சுவாமி, அம்மனின் திருத்தேர்களானது மதுரை நகர வீதிகளான கீழமாசி வீதி, தெற்குமாசி வீதி, மேலமாசி வீதி, வடக்குமாசி வீதிகளில் வலம் வருகிறது. இதன் காரணமாக மாசி வீதிகள் முழுவதும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டிருந்தனர்.தேரோட்டத்தை காண மதுரை மற்றும் சுற்று வட்டாரங்களில் இருந்தும் அண்டை மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்துள்ள நிலையில், மதுரை மாநகர காவல்துறை சார்பில் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட காவல்துறையினர் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். சீருடை அணியாத காவல்துறையினர் தொடர்ந்து ரோந்து பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்

தேரோட்டம் நடைபெறுவதை முன்னிட்டு மாசி வீதிகள் முழுவதிலும் போக்குவரத்திற்கு தடை விதிக்கப்பட்டது. மாசி வீதிகளில் உயரமாக செல்லும் மின்வயர்கள் தற்காலிகமாக அகற்றப்பட்டன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தீயணைப்பு வாகனங்கள் ஆம்புலன்ஸ் உள்ளிட்ட அவசர ஊர்திகள் பாதுகாப்பிற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.



## கீழடி அர்ஜீன லிங்கேஸ்வரர் அமிர்த வல்லி அம்மன் திருக்கல்யாணம் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்தனர்







**மானாமதுரை ஏப் 30:** சிவகங்கை மாவட்டம் மதுரை ராமேஸ்வரம் சாலையில் உள்ளது. கீழடி இங்கு பிரசித்தி பெற்ற பஞ்ச பாண்டவர்கள் வழி செய்த அருள்மிகு ஸ்ரீ அர்சுண லிங்கேஸ்வரர் கோவில் உள்ளது.

தற்போது கும்பாப ஷேகம் செய்ய திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கபட உள்ளது. இக் கோவில் வளாகத்தில் உள்ள அரசமரம் என்ற சிவனுக்கு வேம்புமரம் என்ற சக்திக்கும் கடந்த ஆண்டு திருமணம் விழா நடைபெற்றது.

இந்த ஆண்டு கும்பாபிஷேகம் திருப்பணிகள் விரைவில் முடிய வேண்டியும், வெயில் தாக்கம் தணிந்து மழைபெய்து பூமி குளிர வேண்டியும் திருகல்யாண நிகழ்ச்சி நடைபெற்றது.

காலை சிறப்பு யாகம் அதைத் தொடர்ந்து அர்சுணலிங்கஸ்வரர் அமிர்த வல்லி அம்மன் திருக்கல்யாணம் வேத மந்திரங்கள் ஓதி திருக்கல்யாணம் நடைபெற்றது. ஏராளமான பெண் பக்தர்கள் வழிபாடு செய்து திருமாங்கல்யம் மாற்றி கொண்டனர்.

அதை தொடர்ந்து அன்னதானம் நடைபெற்றது. இரவு திருவிளக்கு பூஜை வழிபாடு செய்தனர். ஸ்ரீ அர்ச்சுன லிங்கேஸ்வரர் திருக்கோவில் திருப்பணிக்குழு மற்றும் கீழடி கிராம பொதுமக்கள் விழா ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

## தமிழ்நாட்டில் இருந்து 16 விமானங்களில் 6,275 பேர் ஹஜ் பயணம்



**சென்னை, ஏப்.30:** தமிழ்நாட்டில் இருந்து இந்த ஆண்டு 6,275 பேர் சவுதி அரேபியாவில் உள்ள புனித மெக்கா நகருக்கு ஹஜ் பயணம் மேற்கொள்கிறார்கள்.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு ஹஜ் கமிட்டி உறுப்பினர் குணங்குடி ஆர்.எம். அனிபா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

2026-ம் ஆண்டில் 1,75,025 ஹஜ் பயணிகள் இந்தியாவில் இருந்து ஹஜ் செல்ல சவுதி அரேபியா உடன் இந்திய அரசு ஒப்பந்தம் கையெழுத்தாகி பல மாநிலங்களில் இருந்து ஹஜ் பயணிகள் செல்கிறார்கள்.

தமிழ் நாட்டில் இருந்து ஹஜ் செல்ல 10,800 ஹஜ் பயணிகள் மனு கொடுத்திருந்தனர்.

அதில் மத்திய அரசு கட்டுபாட்டில் உள்ள மும்பை ஹஜ் கமிட்டி 6275 தமிழக ஹஜ் பயணிகளை தேர்வு செய்து உள்ளனர்.

எனவே தமிழ்நாடு மாநில ஹஜ் கமிட்டி சார்பில் 6275 ஹஜ் பயணிகள் 16 விமானங்களில் சென்னை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பயணமாகின்றார்கள்.

முதல் விமானம் சென்னை விமான நிலையத்தில் இருந்து வருகிற 5-ந் தேதி (செவ்வாய்கிழமை) இரவு 9 மணிக்கு ஹஜ் பயணிகளை ஏற்றி செல்லுகின்றது. மே 19-ந் தேதி கடைசி விமானமாகும். பயணிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட விமான பயண தேதியில் 6 மணி நேரத்திற்கு முன்பாக விமான நிலையம் வர வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## சீரடியில் விஜய்... சாய்பாபா கோவிலில் சாமி தரிசனம்




**மும்பை, ஏப்.30:** மகாராஷ்டிர மாநிலம் சீரடி சாய் பாபா கோவிலில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் புதன்கிழமை தரிசனம் செய்தார்.

தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு கடந்த வியாழக்கிழமை நடந்து முடிந்தது. இந்த தேர்தலில் 234 தொகுதிகளிலும் தமிழக வெற்றிக் கழகம் தனித்துப் போட்டியிட்டது.

வருகின்ற மே 4 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ள நிலையில், தவெக தலைவர் விஜய் ஆன்மிகப் பயணம் மேற்கொண்டுள்ளார். நேற்று (ஏப். 28) காலை திருச்செந்தூர் சென்ற விஜய், கடலில் நீராடிய பிறகு சுப்பிரமணிய சுவாமி கோவிலில் சாமி தரிசனம் செய்தார்.

இந்தநிலையில்,சென்னையில் இருந்து விமானம் மூலம் இன்று காலை சீரடி சென்ற விஜய், சாய் பாபா கோவிலில் தரிசனம் செய்தார்.

முன்னதாக, பலமுறை சீரடி சாய் பாபா கோவிலுக்குச் சென்று விஜய் தரிசனம் செய்துள்ளர்.

## கேரளாவில் பாண்டியர் வம்சாவளியினரை சந்தித்த 'பாண்டியர்கள் தேடிப் பயணம்' ஆய்வுக்குழு



**மதுரை ஏப் 30:** பாண்டியர் வரலாற்றை முழுமைப்படுத்தும் நோக்கில் செயல்பட்டு வரும் பாண்டியர்கள் தேடிப் பயணம் வரலாற்று ஆய்வுக்குழு, கேரள மாநிலம் பூஞ்சார் பகுதியில் வாழ்ந்து வரும் பாண்டியர் வம்சாவளியினரான அரச குடும்பத்தினரை நேரில் சந்தித்து முக்கியமான வரலாற்றுத் தகவல்களை சேகரித்துள்ளது.

தேனி மாவட்டம் கூடலூரில் தொடங்கிய இந்த ஆய்வு, பாண்டியர்கள் இடம்பெயர்ந்த வரலாற்றுப் பாதையைத் தொடர்ந்து பூஞ்சார் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 11ம் நூற்றாண்டில் மட்டுமன்றி, அதற்கு முன்னதாகவே 10ம் நூற்றாண்டிலேயே பாண்டிய நாட்டிலிருந்து இடம்பெயர்ந்திருக்கலாம் என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கிடைத்துள்ளதாக ஆய்வுக்குழு தெரிவித்துள்ளது.

பூஞ்சார் அரச குடும்பத்தினரான சுதா வர்மா, சியாமளா தேவி வர்மா, மதுகுமார் வர்மா ஆகியோரை சந்தித்த ஆய்வுக்குழு, பல தலைமுறைகளாக பாதுகாக்கப்பட்டு வந்த வரலாற்று குறிப்புகள், ஆவணங்கள் மற்றும் வாய்வழிக் குறிப்புகளை ஆய்வு செய்து ஆவணப்படுத்தியுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, பாண்டியர்களின் அடையாளமாக விளங்கும் இரட்டை மீன் சின்னம் மற்றும் வீரத்தை குறிக்கும் வீர வாள் ஆகியவை பூஞ்சார் அரச குடும்பத்தினருக்கு ஆய்வுக்குழுவினரால் மரியாதைச் சின்னங்களாக வழங்கப்பட்டன.

இது பாண்டியர் வம்சத் தொடர்ச்சியையும், வரலாற்று உறவினைப் பிரதிபலிக்கும் முக்கிய நிகழ்வாகும். மதுரையில் இருந்து இடம்பெயரும் பொழுது மீனாட்சியம்மன் கோவிலில் இருந்த மீனாட்சி சொக்கநாதர் உற்சவர் சிலை கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படும் தகவல்கள் ஆய்வில் வெளிவந்துள்ளன. அந்தச் சிலையை அடிப்படையாகக் கொண்டு பூஞ்சார் அரண்மனை அருகில் "மதுரை மீனாட்சி" என்ற பெயரில் கோவில் கட்டப்பட்டு, இன்றளவும் அதே மரபில் வழிபாடு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும், அக்கோவிலில் ஆண்டுதோறும் நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடப்படுவதுடன், அருகில் சாஸ்தா கோவில் ஒன்றும் அமைக்கப்பட்டு வழிபாடு நடைபெற்று வருவதாகவும் ஆய்வில் தெரியவந்துள்ளது. இது பாண்டியர் மரபு மற்றும் கேரளத்தின் உள்ளூர் சமய மரபுகளின் ஒருங்கிணைப்பை எடுத்துக்காட்டுகிறது.

ஆய்வுக்குழுவின் தலைமை ஆய்வாளர் மணிகண்டன் கூறுகையில், "பாண்டியர்கள் 11ம் நூற்றாண்டுக்கு முன்னரே இடம்பெயர்ந்ததற்கான உறுதியான ஆவணங்கள் கிடைத்துள்ளன. குறிப்பாக, கேரள தேசத்திற்கு இடம்பெயர்ந்த ஐந்து பாண்டிய வம்ச கிளைகள் அங்கு ஆட்சி புரிந்ததற்கான சான்றுகள் வெளிவந்துள்ளன. பல இடங்களில் அடையாளங்கள் அழிந்து போனாலும், குடும்ப மரபுகள் மற்றும் கோவில் வழிபாடுகள் வழியாக வரலாறு தொடர்ந்து உயிருடன் உள்ளது," என்றார்.

மேலும், "இதுவரை பாண்டிய வரலாற்றில் இடம்பெறாத சில மன்னர்களின் பெயர்களையும், அவர்களின் ஆட்சிக் குறிப்புகளையும் தொகுத்து விரைவில் வெளியிட உள்ளோம். கூடலூரில் தொடங்கிய ஆய்வை பூஞ்சார் வரை முழுமைப்படுத்துவது எங்கள் முக்கிய இலக்காகும்," என்றும் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் மூலம் இதுவரை வெளிவராத பல அரிய வரலாற்று ஆவணங்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. பாண்டியர் வரலாற்றை புதிதாக வடிவமைக்கும் இந்த முயற்சிக்கு பல்வேறு தரப்பிலிருந்தும் பாராட்டுகள் குவிந்துவருகின்றன.

## கோடை மழை இல்லாததால் பனைகளில் பதநீர் சுரப்பதில் வறட்சி குளத்தூர் பகுதியில் தள்ளாடுகிறது பனைத்தொழில்





**தூத்துக்குடி, ஏப்.30:** குளத்தூர் பகுதியில் கோடை மழை இல்லாததால் பனைத்தொழில் பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் அன்றாட செலவுகளுக்கேதொழிலாளர்கள் அல்லாடி வருகின்றனர். தூத்துக்குடி மாவட்டம் குளத்தூர் கிழக்கு கடற்கரை சாலையோரம் உள்ள பனைகளில் கு.சுப்பிரமணியபுரம், பெரியசாமிபுரம், குஞ்சையாபுரம், வேம்பார், கன்னிராஜபுரம், நரிப்பையூர், சாயல்குடி வரையுள்ள பனைத்தொழிலாளர்கள் பனைத்தொழில் செய்து வருகின்றனர்.


குளத்தூர் பகுதியில் உள்ள பனைகள் உயரம் குறைவாக உள்ளதால் சுமார் 200க்கும் மேற்பட்ட வெளியூர் பனைத்தொழிலாளர்கள், குளத்தூர் பகுதியில் உள்ள பனைகளை அதன் உரிமையாளர்களிடம் இருந்து கட்டுக்குத்தகைக்கு எடுத்து பனைத்தொழில் செய்கின்றனர்.

தை மாதம் பிற்பகுதியில் துவங்கும் பனைத்தொழிலில் புரட்டாசி மாதம் இறுதிவரை பனை சீவுதல், பதநீர் இறக்குதல், கருப்பட்டி காய்ச்சுதல் என தொடர்ச்சியான வேலைகள் இருக்கும். ஆனால் இந்த வருடம் துவக்கத்தில் இருந்தே பனைத்தொழில் மந்தமாகவே உள்ளது.

கோடை மழை நன்றாக பெய்தால் ஒரு நாளைக்கு சுமார் 40ல் இருந்து 50 பனை மரங்கள் வரை ஏறி தொழில் செய்யும் தொழிலாளர்கள், சுமார் 60 லிட்டர் வரை பதநீரை இறக்கி கருப்பட்டி காய்ச்சி தொழில் செய்வார்கள்.

தற்போது கோடை மழை அறவே இல்லாமல் பதநீர் உற்பத்தி குறைவாக உள்ளதால் ஒரு நாளைக்கு 20 பனை மரங்கள் ஏறியும் 5 லிட்டர் பதநீர் கிடைப்பதே அரிதாக உள்ளது. இதனால் கருப்பட்டி காய்ச்சக் கூட பதநீர் இல்லாமல் சாலையோரம் வருகின்ற பயணிகளிடம் பதநீர் விற்பனை செய்து வருகின்றனர். இந்த வருடம் வழக்கத்தை விட இன்றுவரை கோடை மழை இல்லாமல் போனதால் பதநீர் சரியான உற்பத்தி இல்லாமல் பனைகள் வறட்சியாகவே உள்ளது.

## மானாமதுரை ஆனந்த வல்லி சோமநாதர் இரட்டை தேரோட்டம்: பக்தர்கள் திரண்டு வழிபாடு செய்தனர்





**மானாமதுரை, ஏப்.30:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சித்திரை திருவிழாவில் ஆனந்த வல்லி அம்மன், சோமநா தர்சுவாமி திருக்கல்யாண நிகழ்ச்சியில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். அதைத் தொடர்ந்து 70 ஆண்டுகளுக்கு பிறகு புதிதாக சுவாமிக்கு தேர் செய்யப்பட்டு இரட்டை தேரோட்டம் நடைபெற்றது.

தேரின் முன்பாக வீதியில் ஆனந்த வல்லி சோமநாதர் திருமுறை கூட்டத்தினர் திருவாசகம் பாடிக்கொண்டு சிவ கொடி ஏந்தி வழிபாடு செய்தனர். இரவு வீதியுலா நிகழ்ச்சி மற்றும் இன்று வியாழக்கிழமை இரவு வீர அழகர் வைகை ஆற்றில் எதிர் சேவை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மே 1ந்தேதி வெள்ளிக்கிழமை அதிகாலை வெள்ளை குதிரை வாகனத்தில் வீர அழகர் புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக ஆனந்த வல்லி சோமநாதர் கோவில் முன்பு உள்ள வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. 2 ந்தேதி சனிகிழமை வைகை ஆற்றில் நிலாச்சோறு நிகழ்ச்சி நடைபெறுகிறது. தொடர்ந்து சித்திரை திருவிழா 6 ந்தேதி வரை நடைபெறுகிறது.

## மதுரை சித்திரைத் திருவிழா கான வருகை தந்த பக்தர்களுக்கு அக்சய பாத்திரம் டிரஸ்ட் சார்பில் உணவு வழங்கப்பட்டது



**மதுரை ஏப் 30:** மதுரையில் உலக புகழ் பெற்ற சித்திரை திருவிழா நடைபெற்றுவருகிறது. முக்கிய விழாவான மீனாட்சி அம்மன் திருக்கல்யாணம், தேரோட்ட விழாவிற்க்கு வருகை தந்த ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு மதுரையின் அட்சய பாத்திரம் டிரஸ்ட் மூலம் பக்தர்களுக்கு திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் அறங்காவலர் வ. சண்முகசுந்தரம் அன்னதானம் வழங்கினார் .அருகில் ஓய்வு பெற்ற காவல் கண்காணிப்பாளர் முனைவர் மணிவண்ணன், மதுரையின் அட்சய பாத்திரம் ட்ரஸ்ட் நிறுவனர் நெல்லை பாலு, ஆகியோர் உடன் இருந்தனர்.

## சிவகாசியில் இளைஞர் கொலை வழக்கில் 6 பேர் கைது

**சிவகாசி,ஏப்.30:** சிவகாசியில் மாரிச் செல்வம் (18) என்ற இளைஞர் கொலை செய்யப்பட்ட வழக்கில் 6 பேர் கைது செய்யப்பட்டனர சரஸ்வதி பாளையத்தைத் சேர்த்த மதி சங்கர், மாதவன், வெங்கடேஷ், பாண்டீஸ்வரன், முத்துப்பாண்டி, சூர்யா ஆகியோரை போலீசார் கைது செய்தனர்.

இஸ்டாக்ராமில் வீடியோ வெளியிடுவது தொடர்பான பிரச்சனையில் இளைஞரை வெட்டிக் கொன்றனர்.

## நங்கநல்லூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சம்பவம்: 'இன்ஸ்டா' பெண் பிரபலம் கொலையில் திடுக்கிட வைக்கும் பரபரப்பு தகவல்கள்

**சென்னை, ஏப்.30:** சென்னை நங்கநல்லூரில் இஸ்டாகிராமில் பிரபலமான நாகலட்சுமி என்ற பெண் நேற்று முன்தினம் கொடூரமாக கணவரால் கொலை செய்யப்பட்ட சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

மனைவியை கொன்று விட்டு கணவர் சுப்பிரமணியனும் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இந்த கொலை மற்றும் தற்கொலை சம்பவத்துக்கு பின்னணியில் திடுக்கிட வைக்கும் வகையில் பல்வேறு பரபரப்பான சம்பவங்கள் அரங்கேறி இருப்பது போலீஸ் விசாரணையில் தெரிய வந்து உள்ளது.

அதுபற்றிய விவரம் வருமாறு:-

கொலை செய்யப்பட்ட நாகலட்சுமிக்கு 42 வயது ஆகிறது. இவர் தன்னை விட 10 வயது மூத்தவரான நெல்லையை சேர்ந்த சுப்பிரமணியனை திருமணம் செய்து கொண்டுள்ளார். இவர்களுக்கு பரத்வாஜ், சைலாஷ்



ஆகிய 2 மகன்கள் உள்ளனர்.

சுப்பிரமணியனுக்கு சரியான வேலை எதுவும் இல்லாத நிலையில் நாகலட்சுமிக்கு ஆடைகள் மீது மிகுந்த ஆர்வம் ஏற்பட்டு உள்ளது. குறிப்பாக அவருக்கு பிடித்த உடையான சேலை விற்பனையில் ஈடுபட தொடங்கினார். இதற்காக நங்கநல்லூர் மற்றும் அண்ணாநகரில் 2 சேலை விற்பனை கடைகளை அவர் நடத்தி வந்தார்.

நாகலட்சுமியின் இந்த தொழில் ஆர்வம் அவரை ஆன்லைன் மூலமாக சேலை வியாபாரத்திலும் தள்ளியது. இன்றைய பெண்கள் மத்தியில் தவிர்க்க முடியாத இடத்தை பிடித்துள்ள இன்ஸ்டாகிராம் பக்கத்திலும் நாகலட்சுமி இணைந்தார்.

நங்கநல்லூர் ஸ்ரீசாய் சில்க்ஸ் ரெடிமேட் சேலைகள் மொத்த மற்றும் சில்லரை விற்பனை என்ற பெயரில் இன்ஸ்டாகிராம் பக்கத்தை தொடங்கி அதன் மூலமாக தினமும் வீடியோக்களையும் வெளியிட்டு வந்தார்.

இன்றைய இளம் தலைமுறை பெண்கள் பலர் சேலை உடுத்துவதை மறந்து போய் இருக்கும் நிலையிலும் சந்தைகளில் ரெடிமேட் சேலைகள் அதிகளவில் விற்பனைக்கு வந்துள்ளது. அதன்படி தனது கடைகளில் ரெடிமேட் சேலைகளை அதிகளவில் நாகலட்சுமி விற்பனை செய்து வந்து உள்ளார்.

இது தொடர்பான வீடியோக்கள் மூலம் அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் சேலைகளை கட்டுவது எப்படி? தைப்பது எப்படி? என்பதை சொல்லி கொடுத்து வந்துள்ளார்.

இதைத் தொடர்ந்து நாகலட்சுமி இன்ஸ்டாகிராம் பக்கத்தை 3½ லட்சம் பேர் பின்தொடர்ந்து வந்துள்ளனர். அவரது இன்ஸ்டாகிராம் வீடியோக்களை பார்த்து நங்கநல்லூர் மற்றும் அண்ணாநகர் கடைகளுக்கு சென்று தங்களுக்கு பிடித்தமான சேலைகளை தேர்வு செய்தனர்.

இதன் மூலம் சேலை விற்பனையில் நாகலட்சுமிக்கு நல்ல வருவாய் கிடைத்துள்ளது. இதை வைத்து 2 மகன்களையும் அவர் நன்றாக படிக்க வைத்துள்ளார்.

மூத்த மகன் பரத்வாஜ் ரஷியாவில் டாக்டருக்கு படித்து வரும் நிலையில் இளைய மகன் சைலாஷ் சென்னையில் உள்ள ஒரு மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் தொடர்பான படிப்பை படித்து வருகிறார்.

இதுபோன்ற சூழலில்தான் அனைவரையும் அதிர்ச்சிக் குள்ளாக்கும் வகையில் நாகலட்சுமியை அவரது கணவர் சுப்பிரமணியன் கொடூரமாக கொலை செய்து விட்டு அவரும் தற்கொலை செய்து கொண்டார்.

இதற்கான காரணம் என்ன என்பது பற்றி போலீசார் நடத்திய விசாரணையில் வேலை எதுவும் இல்லாமல் சுற்றி திரிந்த சுப்பிரமணியன் தன்னை விட மனைவி அதிகமாக பணம் சம்பாதிக்கிறாளே? என்கிற ஏக்கத்தில் தாழ்வு மனப்பான்மையுடன் இருந்து வந்தது தெரிய வந்துள்ளது.

அதே நேரத்தில் மனைவி இன்ஸ்டாகிராமில் வீடியோக்களை வெளியிடுவதிலும் சுப்பிரமணியனுக்கு விருப்பம் இல்லாமல் இருந்து வந்துள்ளது. இருப்பினும் கணவருக்கு நாகலட்சுமி ஓட்டல் வைத்து கொடுத்துள்ளார். ஆனால் அதனை சரியாக நடத்தாததால் லட்சக்கணக்கில் நஷ்டமும் ஏற்பட்டுள்ளது.

திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
• Location: (Nr Mylapore Jn)
• Direction: N/ Face
• Total Area: 2400 sft
• Price: RS.650/sft
LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner

டீலர்கள் தேவை
மைலேஜ் பூஸ்டர்
20% ~ 30%
மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Diag Technologies, Chennai 33
போன் 63746 73041

நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு
1 to 2 ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773

SUN SHINE PROPERTY
(Property & Developers)
லேயவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை
மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft
முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617

Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
UG & PG COURSES
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388

WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
HOUSEKEEPING STAFF (Male & Female)
MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD (Male & Female)
ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
ELECTRICAL SUB-CONTRACTOR
DRIVER
GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

சிங்கபெருமாள்கோயில்
S.P கோயில். On. GST Road
2 ஏக்கர் விற்பனை
1 ஏக்கர் 25cr
வண்டலூர்
கேளம்பாக்கம் ரோடு
17 ஏக்கர் விற்பனை
1 acre 16 cr
Ph. 9566055082

EMI 50%
50% OFFER
PLOT FOR SALE
SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலவளம்பேட்டை
SRI DEVELOPERS
LOCATION: ADAMBAKKAM, GUINDY.
OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.
CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259

முருகன் துணை
A.S.R
ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டகளிலும்
அணுகவும்
7305025591, 9578622711

GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய் ₹1.80 லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

PLOTS FOR SALE
SRI DEVELOPERS
மனைகள் விற்பனைக்கு
கிண்டி
மதுராந்தகம், கருங்குழி, ஒரகடம், படப்பை
EMI Available
BANK LOAN Available
CONTACT: 8220711499, 8870158259

ePAPER PUBLISHING
WEBSITE / SOFTWARE
Publish | Manage | Deliver
Complete Solution for ePaper Publishing
COMPLETE ePAPER WEBSITE / SOFTWARE FOR JUST ₹2999/- PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
CALL / WHATSAPP: 9040463899

JUST Xth PASS
JOB OPPORTUNITY
₹ 25,000/- PER MONTH *
All Taluks & Districts in ALL STATES in INDIA
FRESHERS CAN APPLY
ATTRACTIVE SALARY
GROWTH OPPORTUNITIES
SECURE YOUR FUTURE
APPLY NOW!
Call / WhatsApp: 8122664699
*Terms & Conditions Apply

அகிலாண்டேஸ்வரி நகரில்
வீட்டு மனைகள் உள்ளது
மனை அளவு = 30x40 = 1200 ச.அடி
மனை விலை 1,20,000/- மட்டும்
Cell :7305025591
இடம்: பத்தமடை உள்ளது திருநெல்வேலி மாவட்டம்
LOCATION

நிலம் தேவை
தெற்கு சென்னை
சென்னை
திருப்போரூர்
1 - 2 ஏக்கர்
செங்கல்பட்டு
திருப்போரூர்-செங்கல்பட்டு ரோடு
உடனடி தேவை!
தொடர்புக்கு
Ph: 6384617773

₹ 15000 - 21000 | Monthly
Full Time Job Apply, Fresh or Experienced,
100% Job Available Here. No registration fee, Direct Job,
Chennai, Tamilnadu,
• 12th to Graduate and Diploma/ITI Qualified and Other Degree Holders.
• Back Office,
• Data Entry,
• Tele Caller's,
• Field officer,
• Team management, Male/Female Both Can Apply,
Share Your Resume with Photo to
77899 41009

ADVERTISE WITH US
7789941009

PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர், கடம்பத்தூர் அருகில்
வீட்டு மனைகள் விற்பனைக்கு
BANK LOAN AVAILABLE
Contact: 9841495210

WANTED
• LAB HELPER
• OFFICE BOY
• GARDENER
CHEMBARAMBAKKAM
CALL US 7550093245 / 7358696451

WANTED
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
Salary: ₹10,000 - ₹15,000
Attractive Incentives
Flexible Work From Home Option
Freshers & Experienced Both Can Apply
Contact Now:
9566072935

D.சக்திவேல்
9940374962

WANTED
OFFICE BOY
GUINDY
CALL US 7550093245 / 7358696451

திருமுடிவாக்கம்
அருகாமையில் அமைந்துள்ள சாரதா கம்பெனிக்கு
ஆட்கள் தேவை
ஆண்கள் மட்டும்
வயது: 18 முதல் 35 வரை
கல்வி தகுதி
10 முதல் any Degree
தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI, PF, Attendance Allowance போன்ற அனைத்து வசதிகளும் உண்டு
சம்பளம்:
18,000 முதல் 22,000 /-
தொடர்புக்கு:
9962400330, 9962400319, 9962400336
மெயில்: hrsarathagroup@gmail.com


WANTED
ELECTRICIAN SUPERVISOR
ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US 7550093245 / 7358696451

WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

MATRIMONY WEBSITE/SOFTWARE
VIVAH | SHAADI | PELLI | KALYANAM
Find Your Perfect Life Partner
COMPLETE MATRIMONY WEBSITE FOR JUST ₹2999/- PER YEAR
HOSTING Included
ADMIN PANEL Included
MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
GET YOUR PROFESSIONAL MATRIMONY WEBSITE TODAY!
BEST PRICE BEST SOLUTION
CALL US 9040463899
WEBSITE www.matrimonyweb.in



## கவிதை அரங்கம்!



உன்னைப் பார்த்த அந்த
முதல் நொடி, இன்னும்
என் நினைவில் பசுமையாக
இருக்கிறது.

என் மௌனத்தைக்
கலைக்கும் ஒரே இசை
உன் கொலுசுச் சத்தம்.


உனக்காக நான்
காத்திருப்பது, எனக்கே

நான் செய்து கொள்ளும்
தவம்.

காதலின் எல்லை
எதுவென்று எனக்குத்
தெரியாது, உன்னோடு
வாழும் வரை அது நீளும்.

நீ என் பாதி அல்ல, நீதான்
என் முழுமை!

## வாழ்க்கை தத்துவம்...



நன்றியுள்ள இதயம் கடவுளின் இருப்பிடம்.

மாற்றங்களை ஏற்றுக்கொள்வதுதான் புத்திசாலித்தனம்.

பிறக்கும்போது எதையும் கொண்டு வரவில்லை;
போகும்போதும் எதையும் கொண்டு
செல்லப்போவதில்லை.

புகழைத் தேடாதே; புண்ணியத்தைத் தேடு.

குறுந் தத்துவங்கள் (51 - 100)
நம்பிக்கை இருந்தால் இருளும் வெளிச்சமாகும்.

பொறுமை என்பது கசப்பானது, அதன் கனி
இனிப்பானது.

## ஊதுனா வெறும் காத்து தான் வருது

சதாசிவத்திற்கு அன்று ஏகப்பட்ட சந்தோஷம். அவர் எழுதிய நகைச்சுவைத் துணுக்கு ஒன்று ஒரு வார இதழில் பிரசுரமாகியிருந்தது. அந்த உற்சாகத்தில், பக்கத்து வீட்டுப் பையன் பாலுவின் பிறந்தநாளுக்கு ஒரு பெரிய பலூன் பாக்கெட்டை வாங்கிக்கொண்டு அவசர அவசரமாகச் சென்றார். "பாலு குட்டி! இந்தா உனக்கு கிப்ட். இதையெல்லாம் ஊதி, வீடு முழுக்க அலங்காரம் பண்ணுங்க" என்று பெருமையாகக் கொடுத்தார். அரை மணி நேரம் கழித்து பாலு அழுதுகொண்டே வந்தான். "தாத்தா... நீங்க கொடுத்தது எல்லாமே வேஸ்ட் தாத்தா. ஒன்னு கூட ஊத வரல" என்றான். சதாசிவத்திற்குத் தன் மானமே போனது போல இருந்தது. "என்னது வரலையா? இரு நான் ஊதிக் காட்டுறேன்" என்று ஒரு சிவப்பு நிற பலூனை எடுத்து, மூச்சைப் பிடித்து, கன்னம் வீங்கப் பலமாக ஊதினார். ம்ஹூம்... பலூன் ஒரு மில்லிமீட்டர் கூடப் பெரியதாகவில்லை. மாரத்தான் ஓடியவர் போல மூச்சிரைக்க, "என்ன சரசு இது? அந்த கடைக்காரன் என்னைக் ஏமாத்திட்டான் போல இருக்கு. எவ்வளவோ ட்ரை பண்றேன்... ஊதுனா வெறும் காத்து தான் வருது, பலூன் உப்பவே மாட்டேங்குது!" என்று தன் மனைவியிடம் புலம்பினார். சரசு அருகில் வந்து அந்தப் பலூன் பாக்கெட்டைப் பார்த்தாள். பிறகு பொறுமையாக ஒரு பலூனை எடுத்து, அதன் அடியில் இருந்த ஒரு சிறிய பிளாஸ்டிக் மூடியைத் திருகினாள். அடுத்த நிமிடம் அது தானாகவே உப்பத் தொடங்கியது. சதாசிவம் கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்தார். சரசு நக்கலாகச் சிரித்தாள். "யோவ்! இது அந்த காலத்து பலூன் இல்லங்க. இது 'செல்ஃப் இன்ஃப்லேட்டிங்' (SELF-INFLATING) ஹைடெக் பலூன். இதுக்குள்ள ஒரு சின்ன பட்டன் இருக்கும், அதை அமுக்குனா அதுவே உப்பிக்கும். நீங்க பாட்டுக்கு வாய் வச்சு ஊதிட்டு இருந்தா எப்படி?" சதாசிவம் அசடு வழிந்தார். "அது சரி... அப்போ நான் இவ்வளவு நேரம் கஷ்டப்பட்டு ஊதுனது?" சரசு கிண்டலாகச் சொன்னாள், "அதான் நீங்களே சொன்னீங்களே... ஊதுனா வெறும் காத்து தான் வருதுன்னு! உங்ககிட்ட காத்து இருக்கு, ஆனா இதைப் பயன்படுத்துற டெக்னிக் (TECHNIQUE) இல்லையே!" சதாசிவம் தன் தலையைத் தடவிக்கொண்டார். தொழில்நுட்பம் வளர்ந்த வேகத்தில், சாதாரண பலூன் கூடத் தன்னை ஏமாற்றிவிட்டதை நினைத்து ஒரு புதிய 'ஜோக்' எழுதத் தொடங்கினார்.

**வெ.நாராயணன்**
லால்குடி

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



நோயாளி: டாக்டர், நான் எப்போ பார்த்தாலும் சோகமாவே இருக்கேன்.
டாக்டர்: அப்படின்னா நீங்க தினமும் 8 மணி நேரம் சிரிச்சுக்கிட்டே இருக்கணும்.

நோயாளி: அது எப்படி டாக்டர் முடியும்?
டாக்டர்: காலையில எழுந்ததும் உங்க "ஆதார் கார்டு" போட்டோவை ஒரு தடவை பாருங்க, அப்புறம் தானாவே சிரிப்பு வரும்!



## தினம் ஒரு சமையல்



## காலிபிளவர் சில்லி

தேவையான பொருட்கள்:

காலிபிளவர்: 1 நடுத்தர அளவு (சிறிய பூக்களாக நறுக்கியது)
கடலை மாவு: 3 மேஜைக்கரண்டி
சோள மாவு (CORN FLOUR): 2 மேஜைக்கரண்டி
அரிசி மாவு: 1 மேஜைக்கரண்டி (மொறுமொறுப்பிற்கு)
இஞ்சி பூண்டு விழுது: 1 தேக்கரண்டி
மிளகாய்த் தூள்: 1 - 2 தேக்கரண்டி (காரத்திற்கு ஏற்ப)
கரம் மசாலா: ½ தேக்கரண்டி
மஞ்சள் தூள்: ¼ தேக்கரண்டி
எலுமிச்சை சாறு: 1 தேக்கரண்டி
உப்பு: தேவையான அளவு
எண்ணெய்: பொரிப்பதற்கு தேவையான அளவு
கருவேப்பிலை: ஒரு கைப்பிடி (வாசனைக்கு)

செய்முறை:



சுத்தம் செய்தல்: ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி, சிறிது உப்பு மற்றும் மஞ்சள் தூள் சேர்த்து கொதிக்கவிடவும். தண்ணீர் கொதித்ததும் நறுக்கி வைத்துள்ள காலிபிளவர் பூக்களை அதில் போட்டு 2 நிமிடம் மட்டும் மூடி வைக்கவும். பின் தண்ணீரை வடித்துவிடவும். (இது பூக்களில் உள்ள சிறு புழுக்களை நீக்கி, சில்லியை மென்மையாக்க உதவும்).
மசாலா தயாரித்தல்: ஒரு அகலமான பாத்திரத்தில் கடலை மாவு, சோள மாவு, அரிசி மாவு, இஞ்சி பூண்டு விழுது, மிளகாய்த் தூள், கரம் மசாலா, மஞ்சள் தூள், எலுமிச்சை சாறு மற்றும் தேவையான அளவு உப்பு ஆகியவற்றைச் சேர்க்கவும்.
கலக்குதல்: இந்த மசாலா கலவையில் மிகக் குறைந்த அளவு தண்ணீர் தெளித்து கெட்டியான பேஸ்ட் போல பிசையவும். பிறகு, தயார் செய்து வைத்துள்ள காலிபிளவர் பூக்களை இதில் சேர்த்து, மசாலா எல்லா இடங்களிலும் படுமாறு நன்றாகக் கிளறவும். இதனை 15 முதல் 20 நிமிடம் ஊற வைக்கவும்.
பொரித்தல்: வாணலியில் எண்ணெய் ஊற்றி சூடாக்கவும். எண்ணெய் நன்றாக சூடானதும், அடுப்பை மிதமான தீயில் வைத்து, காலிபிளவர் துண்டுகளை ஒவ்வொன்றாகப் போடவும்.
பரிமாறுதல்: காலிபிளவர் பொன்னிறமாகவும், மொறுமொறுப்பாகவும் வரும் வரை வேகவைத்து எடுக்கவும். இறுதியில் அதே எண்ணெயில் கருவேப்பிலையை பொரித்து சில்லியின் மேல் தூவினால் மணம் கூடுதலாக இருக்கும்.

## இலந்தை பயன்கள்



1. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் இலந்தைப் பழத்தில் வைட்டமின் C மற்றும் வைட்டமின் A அதிக அளவில் உள்ளன. இவை உடலில் நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்தி, சளி, இருமல் மற்றும் தொற்று நோய்கள் வராமல் தடுக்க உதவுகின்றன.
2. செரிமானத்தை சீராக்கும்
இதில் உள்ள நார்ச்சத்து (FIBER) மலச்சிக்கல் பிரச்சனையைத் தீர்க்கும். குடல் இயக்கத்தைச் சீராக்கி, செரிமானக் கோளாறுகளைக் குணப்படுத்தும் தன்மை இதற்கு உண்டு.
3. எலும்புகளுக்கு வலிமை
இலந்தையில் கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் இரும்புச்சத்துக்கள் நிறைந்துள்ளன. இவை எலும்புகள் தேய்மானம் அடைவதைத் தடுத்து, எலும்பு அடர்த்தியை அதிகரிக்க உதவுகின்றன. குறிப்பாக வளரும் குழந்தைகளுக்கு இது மிகவும் நல்லது.
4. ஆழ்ந்த உறக்கத்திற்கு உதவும்
சீன மருத்துவத்தில் தூக்கமின்மை (INSOMNIA) சிகிச்சைக்காக இலந்தை பயன்படுத்தப்படுகிறது. இதன் விதையில் உள்ள சபோனின்கள் (SAPONINS) மன அழுத்தத்தைக் குறைத்து, நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்தி நல்ல உறக்கத்தைத் தரும்.
5. ரத்த ஓட்டத்தை மேம்படுத்தும்
இதில் உள்ள இரும்பு மற்றும் பாஸ்பரஸ் சத்துக்கள் ரத்த சிவப்பணுக்களின் உற்பத்தியை அதிகரித்து, ரத்த சோகை (ANEMIA) வராமல் தடுக்கின்றன. இது ரத்த ஓட்டத்தைச் சீராக வைக்க உதவும்.

## சினிமா

## தனுஷுக்கு ஜோடியாக நடிக்க மறுத்த பிரபல நடிகை.. கர இயக்குனர் சொன்ன தகவல்



தனுஷ் அடுத்து நடித்து இருக்கும் படம் கர. போர் தொழில் பட புகழ் இயக்குனர் விக்னேஷ் ராஜா தான் இந்த் படத்தை இயக்கி இருக்கிறார்.

இந்த படத்தில் தனுஷ் ஜோடியாக மமிதா பைஜூ நடித்து உள்ளார். பிஸி நடிகையான மமிதாவை கருப்பான கிராமத்து பெண் ரோலில் இயக்குனர் நடிக்க வைத்திருந்ததும் நெட்டிசன்களால் விமர்சிக்கப்படுகிறது.

இது பற்றி பேசிய இயக்குனர் விக்னேஷ் ராஜா, இந்த ரோலுக்கு முதலில் 3BHK , மை லார்ட் போன்ற படங்களில் நடித்த சைத்ரா ஜே அச்சாரை நடிக்க வைக்க தான் விரும்பியதாகவும், அவரை அணுகி கதை சொன்னபோது, அவர் நடிக்க முடியாது என மறுத்து விட்டாராம்.

அதன் பிறகு தான் மமிதா பைஜூவை அந்த ரோலில் நடிக்க வைத்தேன் என விக்னேஷ் ராஜா கூறியுள்ளார். இப்படி ஒரு ரோலில் நடிக்க மமிதா ஒப்புக்கொள்ளமாட்டார் என முதலில் நினைத்தேன், ஆனால் அவர் ஓகே சொல்லி ஆச்சர்யம் கொடுத்தார் எனவும் இயக்குனர் கூறியுள்ளார்



ஹாட் உடையில் போஸ் கொடுத்து கிளாமராக போட்டோஷூட் எடுத்த ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.

## LIK திரைப்படத்தின் இறுதி வசூல்.. பாக்ஸ் ஆபிஸ் ரிப்போர்ட்




2026ஆம் ஆண்டு தமிழ் சினிமா ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட திரைப்படங்களில் ஒன்று LOVE INSURANCE KOMPANY. பிரதீப் ரங்கநாதன் நடிப்பில் இயக்குநர் விக்னேஷ் சிவன் இயக்கத்தில் உருவான இப்படத்திற்கு அனிருத் இசையமைத்திருந்தார்.

க்ரித்தி ஷெட்டி, எஸ்.ஜே. சூர்யா, சீமான், மாளவிகா, கௌரி ஜி. கிஷன் என பல நட்சத்திரங்கள் இப்படத்தில் நடித்திருந்தனர். கடந்த 10ஆம் தேதி திரைக்கு வந்த இப்படம் ரசிகர்களிடையே கலவையான விமர்சனங்களை பெற்றது. இதனால் முதல் நாளில் இருந்தே வசூலில் எதிர்பார்த்த அளவிற்கு வரவேற்பு கிடைக்கவில்லை.

இந்நிலையில், LIK திரைப்படத்தின் இறுதி வசூல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் மொத்தமாக ரூ. 67 கோடி உலகளவில் வசூலித்து பாக்ஸ் ஆபிஸில் படுதோல்வியை சந்தித்துள்ளது.

லவ் டுடே, டிராகன், டியூட் என தொடர்ந்து ஹாட்ரிக் வெற்றியை கொடுத்த பிரதீப் ரங்கநாதனுக்கு இது முதல் தோல்வியாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# தெலங்கானா பணிமனையில் கிரேன் சரிந்து விழுந்ததில் 5 பேர் உயிரிழப்பு; 11 பேர் காயம்

**ஐதராபாத், ஏப்.30:**


தெலங்கானாவின் ரங்காரெட்டி மாவட்டம், சங்கர்பள்ளி மண்டலத்தில் அமைந்துள்ள என்சிசி பணிமனையில் நேற்று (ஏப்.27) கிரேன் சரிந்து விழுந்த விபத்தில் 5 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்; 11 பேர் காயமடைந்தனர்.

ரங்காரெட்டி மாவட்டத்தில் செவெல்லா எல்லைக்குட்பட்ட மகாலிங்கபுரம் கிராமத்தில் உள்ள என்சிசி பணிமனையில், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்துகொண்டிருந்த வேளையில், மழையிலிருந்து தப்புவதற்காக கிரேனுக்கு அருகிலேயே அமைந்திருந்த ஒரு கொட்டகைக்குள் மொத்தம் 16 தொழிலாளர்கள் தங்கியிருந்தனர்.

அப்போது கிரேன் திடீரெனச் சரிந்து, அந்தக் கொட்டகையின் மீது விழுந்தது. இதில் 5 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்; 11 பேர் காயமடைந்தனர். இச்சம்பவம் குறித்துக் காவல் துறையினர் விசாரணையைத் தொடங்கியுள்ளனர்.

உயிரிழந்தவர்கள் அலி ஹுசைன், நாகேந்திர சிங், சஜீம், முகேஷ் குமார் மற்றும் சோனு ராஜீபி என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பிஹார் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

# ஆந்திராவில் ரூ.1.35 லட்சம் கோடி முதலீடு: கூகுள் ஏஐ டேட்டா மையத்துக்கு அடிக்கல்




**விசாகப்பட்டினம், ஏப்.30:**

ஆந்திர மாநிலம் விசாகப் பட்டினத்தில் 3 இடங்களில் ரூ.1.35 லட்சம் கோடி முதலீட்டில் கூகுள் ஏஐ டேட்டா மையம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று நடைபெற்றது. இதில், மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவுடன் இணைந்து ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அடிக்கல் நாட்டினார். இதன் மூலம் 1.88 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

ஆந்திர மாநிலம் விசாகப் பட்டினம் தர்லவாடா பகுதியில் நேற்று கூகுள் ஏஐ டேட்டா மையத்துக்கான அடிக்கல் நாட்டு விழா விமரிசையாக நடந்தது. விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் மற்றும் முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆகியோர் அடிக்கல் நாட்டினர். ரூ.1.35 லட்சம் கோடி முதலீட்டில் அமைய உள்ள கூகுள் ஏஐ டேட்டா மையம் மூலம் 1.88 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க உள்ளது. ஒரு கிகாவாட்டுக்கு மேல் திறன் கொண்ட இந்த ஏஐ மையம், விசாகப் பட்டினத்தில் 2028-ம் ஆண்டுக்குள் அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில், தர்லவாடாவில் 266.6 ஏக்கரிலும், பின்னர் அடவிவரம் பகுதியில் 160 ஏக்கரிலும், அனகாபல்லி மாவட்டம் ராம்பில்லி அருகே 174.80 ஏக்கரிலும் இந்த டேட்டா மையங்கள் அமைக்கப்பட உள்ளன. இந்த மையம் கட்டப்படும்போதே சிவில், எலக்ட்ரிக்கல் மற்றும் மெக்கானிக்கல் பிரிவுகளில் தேர்ச்சி பெற்ற சுமார் 60 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க உள்ளது.

கேம் சேஞ்சர்: விசாகப் பட்டினத்துக்குக் கூகுள் ஏஐ டேட்டா மையம் வரவு என்பது ஒரு கேம்சேஞ்சர் என ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

# டிஜிட்டல் கைது முறைகேடு தொடர்புடைய 9,400 வாட்ஸ்- அப் கணக்கு முடக்கம்




**புதுடெல்லி, ஏப்.30:**

நாட்டில் தொடர்ந்து நடைபெறும் டிஜிட்டல் கைது முறைகேடுகள் குறித்து உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்தது. இந்த வழக்கை தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த வழக்கில் மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில் தலைமை வழக்கறிஞர் ஆர் .வெங்கடரமணி, உச்சநீதிமன்றத்தில் தற்போதைய நிலை அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது: டிஜிட்டல் கைது முறைகேடுகளை தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை தொலைத்தொடர்பு நிறுவனங்களும், இணைய தளங்களும், வங்கிகளும் எடுத்து வருகின்றன. சிம் கார்டுகளை விரைவாக முடக்குவது, வாட்ஸ்- அப் பயனாளரை பயோமெட்ரிக் முறையில் சரி பார்ப்பது போன்றவை செயல்படுத்தப் பட்டுள்ளன. டிஜிட்டல் கைது முறைகேட்டில் பயன்படுத்தப்பட்ட 9,400 கணக்குகளை வாட்ஸ்- அப் முடக்கியுள்ளது. டிஜிட்டல் கைது முறைகேட்டில் ஈடுபடும் நபர்கள் பெரும்பாலும் தெற்காசிய நாடான கம்போடியாவில் இருந்து செயல்படுகின்றனர். போலி பயனாளர்களைத் தடுக்க, பயனாளர் பெயர்களை காட்டும் முறை கடந்த ஜனவரி முதல் நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

# சமூக ஊடகங்களில் ஆதரவளிக்கும் அகிலேஷ்: மம்தா பானர்ஜிக்காக பிரச்சாரம் செய்யாதது ஏன்?

**புதுடெல்லி, ஏப்.30:**



உத்தரபிரதேச மாநில முன்னாள் முதல்வரான அகிலேஷ், மேற்கு வங்க முதல்வர் மம்தாவுக்கு மிகவும் நெருக்கமானவராகக் கருதப்படுகிறார். இவர் கடைசியாக, கடந்த ஜனவரியில் முதல்வர் மம்தாவை கொல்கத்தாவில் சந்தித்தார். ஆனால், அங்கு தேர்தல் நெருங்கியதும் சமாஜ்வாதி கட்சித் தலைவரான அகிலேஷ், மேற்கு வங்க மாநிலத்திலிருந்து விலகியே இருந்தார். மம்தா பானர்ஜிக்கு அகிலேஷின் ஆதரவு சமூக ஊடகப் பதிவுகளுடன் மட்டும் நின்றுபோனது.

அதேசமயம், அகிலேஷுடன் இண்டியா கூட்டணியில் இடம்பெற்றுள்ள பிஹாரின் முன்னாள் துணை முதல்வரும், ஆர்ஜேடி கட்சித் தலைவருமான தேஜஸ்வி யாதவும், ஜார்க்கண்டின் முதல்வரான ஹேமந்த் சோரனும் திரிணமூல் காங்கிரஸ்(டிஎம்சி) வேட்பாளர்களுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தனர். டெல்லியின் முன்னாள் முதல்வரான அர்விந்த் கேஜ்ரிவால் கூட டிஎம்சிக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்து திரும்பினார்.


இந்த 3 தலைவர்களை விடவும் சமாஜ்வாதியின் அகிலேஷ், முதல்வர் மம்தாவுக்கு மிகவும் நெருக்கமானவராகக் கருதப்பட்டார். இந்நிலையில் அவரது செயல், வெறும் தற்செயல் நிகழ்வா அல்லது இதற்குப் பின்னால் ஏதேனும் அரசியல் கணக்கு உள்ளதா? என்ற கேள்விகளும் தற்போது எழுந்துள்ளன. தேசிய அளவிலான இண்டியா கூட்டணிக் கட்சிகளாக இருந்தும் மேற்கு வங்க மாநிலத்தில் காங்கிரஸ் மற்றும் டிஎம்சி கட்சிகள் தனித்தனியாகவே தேர்தலைச் சந்தித்தன. ஆனால், இந்தமுறை 6 பொதுக் கூட்டங்களை மேற்கு வங்கத்தில் ராகுல் காந்தி நடத்தினார். இந்தக் கூட்டங்களில், மம்தா பானர்ஜி மற்றும் டிஎம்சி மீது ராகுல் காந்தி கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.

மாநிலத்தில் ஜனநாயகம் நிலவுவதற்குப் பதிலாக, டிஎம்சியின் ஆட்சியே நடைபெற்று வருவதாகக் கூட அவர் குற்றம் சாட்டினார். அகிலேஷ் யாதவ் பிரச்சாரத்தில் ஈடுபடாமல் இருக்க எடுத்த முடிவுக்கு, ராகுலின் நடவடிக்கையும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கடந்த மக்களவை தேர்தலில் சமாஜ்வாதியுடன் காங்கிரஸும் இணைந்து போட்டியிட்டது. இதேபோல், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உ.பி.யின் சட்டப்பேரவைத் தேர்தலிலும் கூட்டணி அமைக்கும் ஊகங்கள் நிலவுகின்றன.

# குஜராத் உள்ளாட்சித் தேர்தல்: பாஜக அமோக வெற்றி -பிரதமர் வாழ்த்து

**புதுடெல்லி, ஏப்.30:**



மாநகராட்சிகள், நகராட்சிகள், பஞ்சாயத்துகள் என உள்ளாட்சித் தேர்தலில் மொத்தமுள்ள 9,900 இடங்களில் 6,472 இடங்களை பாஜக கைப்பற்றியுள்ள நிலையில், அங்கு வாக்கு எண்ணிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. காங்கிரஸ் 1,412 இடங்களிலும் ஆம் ஆத்மி, அகில இந்திய மஜ்லீஸ் கட்சி மற்றும் சுயேச்சைகள் 597 இடங்களிலும் வென்றிருப்பதாக செவ்வாய்க்கிழமை மாலை நிலவரப்படி குஜராத் மாநில தேர்தல் ஆணையம் வெளியிட்ட தரவுகளில் தெரிவிக்கப்பட்டது.

குஜராத்தில் அகமதாபாத், சூரத், வதோதரா உள்ளிட்ட 15 மாநகராட்சிகள், 84 நகராட்சிகள், 34 மாவட்ட பஞ்சாயத்துகள், 260 தாலுகா பஞ்சாயத்துகளுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நடத்தப்பட்டது. இத்தேர்தலில் வாக்களிக்க 4.18 கோடிக்கு மேற்பட்ட வாக்காளர்கள் தகுதிபெற்றிருந்தனர். மாநகராட்சிப் பகுதிகளில் 55.1 சதவீதம், நகராட்சிகளில் 65.53 சதவீதம், மாவட்ட பஞ்சாயத்துகளில் 66.64 சதவீதம், தாலுகா பஞ்சாயத்துகளில் 67.26 சதவீத வாக்குகள் பதிவானதாக மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

பாஜகவினருக்கு வாழ்த்து தெரிவித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் தளப் பதிவில், 'குஜராத் மாநில உள்ளாட்சித் தேர்தலில் பெரும் வெற்றியை ஈட்ட காரணமான பாஜக நிர்வாகிகளுக்கு வாழ்த்துகள். மக்களின் பிரச்னைகளை கண்டறிந்து களத்தில் பணியாற்றி அவற்றுக்கு தீர்வு காண தொடர்ந்து உழைப்பதால்தான் குஜராத் மக்கள் ஒவ்வொரு தேர்தலிலும் பாஜகவை தேர்வு செய்கின்றனர். தற்போது பாஜகவுக்கும் குஜராத்துக்குமான உறவு மேலும் வலுவடைந்துள்ளது. மாநில அரசின் சிறப்பான ஆட்சிக்கு சான்றளிக்கும் விதமாக உள்ளாட்சித் தேர்தலிலும் வெற்றியை மக்கள் பரிசாக அளித்துள்ளனர். வருங்காலங்களில் முன்பைவிட பல மடங்கு வேகமாக குஜராத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்ல நாங்கள் பாடுபடுவோம் என உறுதியளிக்கிறேன்' என குறிப்பிட்டார்.

# குடியரசு துணைத் தலைவர் திருமலையில் வழிபாடு

**திருமலை, ஏப்.30:**

இரண்டு நாள்களாக பயணமாக திங்கள்கிழமை வந்த அவர் இரவு திருமலையில் தங்கி செவ்வாய்க்கிழமை காலை கோயிலை அடைந்ததும், மாநில அறநிலையத்துறை அமைச்சர் நாராயண ரெட்டி, தேவஸ்தான தலைவர் பி.ஆர். நாயுடு, செயல் அதிகாரி ரவிச்சந்திரா, கூடுதல் செயல் அதிகாரி சி.எச். வெங்கையா சௌத்ரி, சிவிஎஸ்ஓ முரளிகிருஷ்ணா ஆகியோர் வரவேற்றனர். மேலும், அர்ச்சகர்கள் குழுவினர் கோயில் சடங்குகளுடன் இஸ்திகபால் மரியாதை அளித்து அழைத்து சென்றனர்.

முதலில், அவர் கொடிமரத்தை வணங்கி பின்னர் கோயிலுக்குள் சென்று ஏழுமலையானை தரிசித்தார்.

அதைத் தொடர்ந்து, அவர் வகுளமாதா, விமான வெங்கடேஸ்வர சுவாமி, பாஷ்யங்காரர் சன்னிதி மற்றும் யோக நரசிம்ம சுவாமி ஆகியோரைத் தரிசித்தார்.

பின்னர், வேத அறிஞர்கள் ரங்கநாயக்கர் மண்டபத்தில் வேதஆசீர்வாதம் வழங்கினர். திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் தலைவரும் செயல் அதிகாரியும் சுவாமியின் படத்தையும் தீர்த்த பிரசாதத்தையும் வழங்கினர்.

# வெளிநாடுவாழ் இந்திய குடிமகன் அட்டை விண்ணப்பக் கட்டணம்: ரூ.26,034-ஆக நிர்ணயம்

**புதுடெல்லி, ஏப்.30:**

வெளிநாடுகளில் உள்ள தூதரகங்களில் விண்ணப்பிக்கும்போது மேற் குறிப்பிட்ட கட்டணம் அந்த நாட்டின் ரூபாய் மதிப்பிலும் இந்தியாவில் விண்ணப்பித்தால் நமது நாட்டின் ரூபாய் மதிப்பிலும் செலுத்த வேண்டும் என அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை தெரிவித்தனர். முன்னதாக இந்தியாவில் இருந்து ஓசிஐ அட்டைக்கு விண்ணப்பிக்க ரூ.15,000 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது மாற்றப்பட்டுள்ளது. இதுகுறித்து அதிகாரிகள் மேலும் கூறுகையில், 'ஓசிஐ அட்டைக்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.26,034-ஆக நிர்ணயிக்கப்படுகிறது. ஓசிஐ அட்டையில் உள்ள தகவல்களில் திருத்தங்களை மேற்கொண்டு மீண்டும் விநியோகிக்க ரூ.2,366 (25 அமெரிக்க டாலர்கள்) வசூலிக்கப்படும். ஓசிஐ அட்டை தொலைந்துவிட்டால் அதை மீண்டும் பெற ரூ.9,467 (100 அமெரிக்க டாலர்கள்) கட்டணமாக செலுத்த வேண்டும் என்றனர்.

# அனில் அம்பானியின் ரூ 3,034 கோடி சொத்துகளை முடக்கிய அமலாக்கத் துறை

**புதுடெல்லி, ஏப்.30:**

தொழிலதிபர் அனில் அம்பானிக்குச் சொந்தமான ரிலையன்ஸ் குழுமத்துக்கு எதிரான பண மோசடி வழக்கில் புதிதாக ரூ.3,034 கோடி மதிப்பிலான சொத்துகளை அமலாக்கத் துறை அதிகாரிகள் முடக்கியுள்ளனர்.

மும்பையில் உள்ள அனில் அம்பானிக்குச் சொந்தமான அடுக்குமாடி குடியிருப்பு, மகாராஷ்டிரத்தின் மலைப் பிரதேசமான கண்டாலாவில் உள்ள அனில் அம்பானி மற்றும் அவரின் மகன் ஜெய் அன்ஷுல் அம்பானிக்குச் சொந்தமான பண்ணை வீடு, அகமதாபாத் அருகே சனந்த் பகுதியில் உள்ள நிலங்கள் உள்ளிட்ட ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ் மற்றும் ரிலையன்ஸ் உள்கட்டமைப்பு நிறுவனங்களுக்குச் சொந்தமான மற்றும் ரிலையன்ஸ் உள்கட்டமைப்பு நிறுவனத்தின் ரூ.7.71 கோடி பங்குகள் என மொத்தம் ரூ. 3,034 கோடி மதிப்பிலான சொத்துகள் முடக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இறப்புக்கு ஆதாரமாக வங்கிக்கு சகோதரியின் எலும்புக் கூட்டுடன் வந்த நபர் – ஒடிசாவில் அதிர்ச்சி

**கியோஞ்சர், ஏப்.30:**

ஒடிசாவின் கியோஞ்சர் மாவட்டத்தை சேர்ந்த, வயதான பழங்குடியின நபர் ஒருவர், தனது இறந்த சகோதரியின் வங்கிக் கணக்கில் இருந்த பணத்தை எடுப்பதற்காக, நேற்று (ஏப்.27) அவரின் எலும்புக் கூட்டையே தோண்டியெடுத்து வங்கிக்கு கொண்டுவந்த சம்பவம் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.

கியோஞ்சரின் பட்னா வட்டாரத்தில் உள்ள மாலிபாசி பகுதியைச் சேர்ந்த ஜிது முண்டா (55) என்ற பழங்குடியின நபர், இரண்டு மாதங்களுக்கு முன்பு இறந்த தனது சகோதரி கலரா முண்டாவின் வங்கிக் கணக்கில் இருந்த ரூ.20,000-ஐ எடுக்க பட்னா வட்டாரத்தில் உள்ள ஒடிசா கிராமீன் வங்கியின் மாலிபாசி கிளையை அணுகினார். வங்கி அதிகாரிகள், வங்கிக் கணக்கு உள்ள நபரையோ அல்லது அவர் உயிரிழந்தது தொடர்பான ஆவணங்களையோ சமர்ப்பிக்குமாறு அவரிடம் கேட்டுக் கொண்டனர்.

இது குறித்த புரிதல் இல்லாத அந்த நபர், கல்லறையை தோண்டி உயிரிழந்த தனது சகோதரியின் எலும்புக் கூட்டை வங்கிக்கே எடுத்து வந்துள்ளார்.

இதுகுறித்து பேசிய அவர், "நான் பலமுறை வங்கிக்கு அலைந்து திரிந்தேன். ஆனால், அவரது பெயரில் வைப்புத் தொகையாக உள்ள பணத்தை எடுக்க வேண்டுமென்றால், கணக்கு வைத்திருப்பவரை அழைத்து வருமாறு அங்கிருந்தவர்கள் என்னிடம் கூறினர். அவர் இறந்துவிட்டார் என்று நான் அவர்களிடம் கூறினேன். அவர்கள் பிடிவாதமாக ஆதாரம், ஆவணம் கேட்டனர்.

எனவே, விரக்தியின் காரணமாக, நான் அவரது கல்லறையைத் தோண்டி, இறந்துவிட்டார் என்பதற்குச் ஆதாரமாக அவரது எலும்புக் கூட்டை எடுத்து வந்தேன்" என்று ஜிது முண்டா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# மத நடவடிக்கை என்ற பெயரில் சாலையை மறிக்க முடியாது: உச்ச நீதிமன்றம் கருத்து

**புதுடெல்லி, ஏப்.30:**

சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் வழிபட அனுமதித்த தீர்ப்புக்கு எதிரான மறு ஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான 9 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது இடையீட்டு மனுதாரர் சார்பில் நிஜாம் பாஷா வாதிடும் போது, "ஹிஜாப் அணிவது கட்டாயம் என்ற நம்பிக்கையில் உயர் நீதிமன்றம் தலையிட்டு ஹிஜாப் அணிவது இஸ்லாத்தில் கட்டாயமாகப் பின்பற்றப்படும் வழக்கம் இல்லை என்று தீர்ப்பு கூறியது" என்று தெரிவித்தார். வழக்கறிஞர் ஏகலைவ துவிவேதி வாதிடும் போது, "மத சுதந்திரத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மத விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமைக்குப் பொருந்தாது" என்று தெரிவித்தார். இந்து தர்ம ஆச்சார்ய சபா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் அக்சய் நாகராஜன் கூறும்போது, "மத நடவடிக்கைகளில் பொது ஒழுங்கு உள்ளிட்ட காரணங்களைக் காட்டி அரசு தலையிட முடியாது " என்றார். அப்போது நீதிபதி பி.வி. நாகரத்னா கூறும்போது, "மதச்சார்பற்ற நடவடிக்கைகள் பாதிக்கப்படும் பட்சத்தில் அரசு தலையிட முடியும். உதாரணத்துக்கு ஒரு கோயிலில் நடைபெறும் தேரோட்ட நிகழ்வுக்காக அனைத்து சாலைகளையும் மறித்து அடைத்துவைக்க முடியாது. சாலைகளை மறித்து அடைத்து வைப்பதற்கும், மதத்துக்கும் தொடர்பில்லை. அரசு தலையிட்டு முறைப்படுத்த முடியும்" என்று தெரிவித்தார். வழக்கறிஞர் அஸ்வினி குமார் உபாத்யாய் கூறும்போது, "லட்சக்கணக்கான மசூதிகள் இருந்தாலும் மெக்காவுக்கும். லட்சக்கணக்கான தேவாலயங்கள் இருந்தாலும் ஜெருசலேத்துக்கும் தனி புனிதத் தன்மை உள்ளது. இதுபோல 1,500 ஐயப்பன் கோயில்கள் இருந்தாலும் சபரிமலைக்கு தனி புனிதத் தன்மை உள்ளது. சம்ஸ்கிருதம் ஆங்கிலத்தை காட்டிலும் அதிகமாக 52 எழுத்துக்களைக் கொண்டுள்ளதால் அலுவல் மொழியாக்கும் மசோதாவை டாக்டர் அம்பேத்கர் அறிமுகப்படுத்தினார்" என்று வாதிட்டார். அப்போது நீதிபதி ஆர். மகாதேவன் குறுக்கிட்டு, "வழக்கு சார்ந்து மட்டும் வாதிட வேண்டும்" என்று தெரிவித்தார். நீதிபதி அறிவுறுத்தல்: அரசமைப்பு சாசனத்தை ஆங்கிலத்தில் விளக்குவது கடினம் என்று வழக்கறிஞர் அஸ்வினி உபாத்யாய் வாதிட்டபோது, மற்றொரு நீதிபதி பி.வி. நாகரத்னா குறுக்கிட்டு "கன்னடமும் 52 எழுத்துகளைக் கொண்டுள்ளது. அனைவரும் சமமே. மேட்டிமை வாதத்தை முன் வைக்க வேண்டாம்" என்று அறிவுறுத்தினார். மற்றொரு நீதிபதி எம்.எம். சுந்தரேஷ் குறுக்கிட்டு இது போன்ற வாதங்களை முன் வைக்கக் கூடாது என்று கூறி வாதத்தை நிறைவு செய்ய அறிவுறுத்தினார்.

# தேர்தலுக்குப் பின் பெட்ரோல், டீசல் விலை உயர்வா? - மத்திய அரசு சொல்வது என்ன?

**புதுடெல்லி, ஏப்.30:**



சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருவதால், தேர்தல் முடிந்தவுடன் எரிபொருள் விலை உயர்த்தப்படலாம் என சமூக வலைதளங்களில் வதந்திகள் பரவின. இதன் காரணமாக, ஆந்திர பிரதேசம் உள்ளிட்ட சில மாநிலங்களில் பொதுமக்கள் பெட்ரோல் நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருளை நிரப்பத் தொடங்கினர்.

இதன் காரணமாக சுமார் 400-க்கும் மேற்பட்ட பெட்ரோல் நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்ட நிலையில், மத்திய அரசு தற்போது இதுகுறித்து விளக்கம் அளித்துள்ளது.

பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் சுஜாதா சர்மா கூறுகையில், "பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை. பொதுமக்கள் வதந்திகளை நம்பி தேவையற்ற முறையில் பீதி அடைந்து எரிபொருளைச் சேமிக்க வேண்டாம். நாட்டில் போதுமான அளவு பெட்ரோல், டீசல் மற்றும் எல்பிஜி சிலிண்டர் இருப்பு உள்ளது," என்று தெரிவித்தார். மேலும், எரிபொருள் விநியோகத்தை அரசு தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் அவர் உறுதி அளித்தார்.

கடந்த 2022-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் இந்தியாவில் எரிபொருள் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை. இருப்பினும், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஒரு பேரலுக்கு 114 டாலராக உயர்ந்துள்ளதால், பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களுக்கு தினசரி சுமார் ரூ.2,400 கோடி இழப்பு ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.




## புளியந்தோப்பில்தான் இந்த துயர சம்பவம் வீட்டில் தனியாக வசித்த 76 வயது மூதாட்டி பாலியல் பலாத்காரம்: காமக்கொடூரன் கைது

**பெரம்பூர், ஏப்.30:** புளியந்தோப்பில் 76 வயது மூதாட்டியை பாலியல் பலாத்காரம் செய்த காம கொடூரனை போலீசார் இன்று காலை கைது செய்தனர். சென்னை புளியந்தோப்பு பட்டாளம் கே.எம்.கார்டன் 1வது தெருவை சேர்ந்தவர் அல்லிராணி (76). இவரது கணவர் இறந்து விட்டார். அல்லிராணிக்கு ராமச்சந்திரன், முரளிதரன், வாசுதேவன், கருணாநிதி என 4 மகன்களும் கீதா என்ற மகளும் உள்ளனர். அனைவருக்கும் திருமணமாகி விட்டது. 4 மகன்களும் அதே பகுதியில் தனித்தனியாக வசித்து வருகின்றனர். கீதா, புரசைவாக்கம் பகுதியில் கணவர் மற்றும் குடும்பத்துடன் வசித்து வருகிறார். UrbanTransit

அல்லிராணி தனிமையில் வசித்து வருவதால், மகள் கீதா, அவ்வப்போது வந்து தேவையான பணிவிடைகளை தாய்க்கு செய்து விட்டு செல்வார். அதுபோன்று நேற்று மாலை வந்தார். அப்போது, அல்லிராணி அணிந்திருந்த நைட்டி கிழிந்த நிலையில் இருந்ததை பார்த்து கீதா கேட்டுள்ளார். ஆனால் வயது முதிர்ச்சி காரணமாக அவரால் எதுவும் சொல்ல முடியவில்லை.

பின்னர் தாயை குளிக்க வைத்து கொண்டிருந்தார். அப்போதுதான் அவரது உடலில் மாற்றங்கள் இருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தார். உடனே மெதுவாக தாயிடம் கேட்டபோதுதான், புளியந்தோப்பு பட்டாளம் கே.எம்.கார்டன் 13வது தெருவை சேர்ந்த மருது என்கின்ற மருதப்பன் (56) என்பவர் நேற்று மதியம் வீட்டுக்கு வந்து பாலியல் பலாத்காரம் செய்தது தெரியவந்தது. கீதா கடும் அதிர்ச்சியுடன் ஆத்திரமடைந்தார். உடனே அல்லிராணியை எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளித்து விட்டு வீட்டுக்கு அழைத்து வந்தார்.

ஆத்திரம் பொங்க, புளியந்தோப்பு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கீதா புகார் அளித்தார். உடனே போலீசார், மருது வீட்டிற்கு விரைந்தனர். அங்கு அவர் இல்லை. அங்கிருந்தவர்களிடம், 'மருதுவுக்கு போன் செய்து உங்களை தேடி போலீசார் வந்துள்ளனர் என கூறுங்கள்' என்றனர். அவர்களும் தொடர்பு கொண்டபோது, எந்தவித பதிலும் வரவில்லை. வீட்டில் இருந்து போன் வந்ததால் உஷாரான மருது தலைமறைவானார்.

இதையடுத்து அவரது செல்போன் சிக்னலை வைத்து போலீசார் கண்காணித்தனர். அவர், கூடுவாஞ்சேரி அருகே பதுங்கியிருப்பது தெரியவந்தது. உடனே போலீசார் விரைந்து சென்று இன்று காலை மருதுவை கைது செய்து போலீஸ் நிலையத்துக்கு அழைத்து வந்தனர். விசாரணையில், மருது பிளம்பர் வேலை செய்து வருகிறார். 12 வருடங்களுக்கு முன்பு கருத்து வேறுபாடு காரணமாக மனைவி பிரிந்து சென்று விட்டார்.

இவர்களுக்கு 3 மகன்கள். அவர்களில் ஒருவர் மனைவியுடனும் மற்ற 2 பேர் மருதுவுடனும் வசித்து வருகின்றனர். மூதாட்டி தனிமையில் இருந்ததை அறிந்து மருது, அவரது வீட்டுக்குள் புகுந்து மூதாட்டியை பாலியல் பலாத்காரம் செய்தது தெரியவந்தது. இதையடுத்து மருது மீது வழக்கு பதிவு செய்து, நீதிமன்றத்தில் அஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## நெல்லை அருகே அண்ணியை தொந்தரவு செய்ததால் சித்தப்பாவை வெட்டிக் கொன்றேன்

**நெல்லை, ஏப்.30:** நெல்லை அருகே அண்ணியை தொடர்ந்து தொந்தரவு செய்ததால் சித்தப்பாவை வெட்டிக் கொன்றேன் என கொலையான கோயில் பூசாரியின் அண்ணன் மகன் பரபரப்பு வாக்குமூலம் அளித்துள்ளார். நெல்லை மாவட்டம் மானூரை அடுத்த பல்லிக்கோட்டை பகுதியை சேர்ந்தவர் கணபதி (60). இவர் அங்குள்ள ஒரு கோவிலில் பூசாரியாக வேலை பார்த்து வந்தார்.

இவரது அண்ணன் மகன் முருகன் (35). இவருக்கும், கணபதிக்கும் நேற்று முன்தினம் பகலில் திடீரென வாக்குவாதம் மூண்டது. கணபதியின் வீட்டின் அருகே நடந்த இந்தத் தகராறில் கோபமடைந்த முருகன் தான் மறைத்து வைத்திருந்த அரிவாளால் கணபதியை சரமாரியாக வெட்டினார். இதில் ரத்த வெள்ளத்தில் சரிந்த கணபதி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்த கொலை சம்பவம் குறித்து தகவல் அறிந்ததும் மானூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் அருண்குமார் விரைந்து சென்றார். இது தொடர்பாக வழக்கு பதிவு செய்து கொலையாளியை தீவிரமாக தேடி வந்தார். தலைமறைவாக இருந்த முருகனை போலீசார் விரைவாக கைது செய்தனர்.

அவரிடம் கொலைக்கான காரணம் குறித்து விசாரித்தனர்.அப்போது போலீசாரிடம் முருகன் அளித்த வாக்குமூலத்தில் கூறியிருப்பதாவது, "எனது சித்தப்பா கணபதி எங்கள் பகுதியில் வசிக்கும் எனது அண்ணி மீது தவறான ஆசை கொண்டிருந்தார்.

இதனை புரிந்து கொண்ட எனது அண்ணி அவரிடம் பேசுவதை குறைத்தார். ஆனாலும் கணபதி விடாமல் அவரை தொடர்ந்து தேடிச் சென்று தொந்தரவு கொடுத்தார். இந்த விவகாரத்தை எனது அண்ணி என்னிடம் தெரிவித்தார். இதனால் நான் கணபதியை கடுமையாக எச்சரித்தேன். அப்போதிருந்து எங்கள் இருவருக்கும் முன்விரோதம் இருந்து வந்தது.

அவர் வீட்டு பக்கம் நான் சென்றபோது மீண்டும் எங்களுக்குள் தகராறு ஏற்பட்டது. அந்த ஆத்திரத்தில் அவரை அரிவாளால் வெட்டிக் கொலை செய்தேன்" என்று அவர் தெரிவித்தாக போலீசார் கூறினர்.இந்த வாக்குமூலத்தை பதிவு செய்த போலீசார் முருகனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி அவரை சிறையில் அடைத்தனர். அண்ணியை தொந்தரவு செய்த சித்தப்பாவை அண்ணன் மகனே வெட்டிக் கொன்ற சம்பவம் அந்த பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## மீனவ குழு உறுப்பினரை அரிவாளால் வெட்டியவர் கைது

**சத்தியமங்கலம், ஏப்.30:** பவானிசாகர் அணையில் சட்டவிரோதமாக பிடித்த மீன்களை பறிமுதல் செய்த மீனவ குழு உறுப்பினரை அரிவாளால் தாக்கியவரை போலீசார் கைது செய்தனர். இது தொடர்பான சிசிடிவி காட்சி வைரலாகி வருகிறது. ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணை நீர்த்தேக்க பகுதியில் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகம் சார்பில் மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கு மீன்பிடி உரிமம் வழங்கப்பட்டது. தமிழ்நாடுசுற்றுலா

இந்த நிலையில், அணை நீர்த்தேக்கத்தில் சட்ட விரோதமாக மீன் பிடித்து வெளிமார்க்கெட்டில் விற்பனை செய்வதை கண்காணிப்பதற்காக மீனவர் கூட்டுறவு சங்கம் சார்பில் 10 பேர் கொண்ட குழுவினர் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் அணையில் கள்ளத்தனமாக மீன் பிடித்து விற்பனைக்காக கொண்டு சென்ற வெற்றிவேல் நகர் மணல் மேடு பகுதியை சேர்ந்த பூபதி (24) என்பவரை இந்த குழுவினர் பிடித்து அவரிடம் இருந்து 33 கிலோ மீன்களை பறிமுதல் செய்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த பூபதியன் தாய் மாமன் கணேஷ் குமார் (39) என்பவர் பவானிசாகரில் உள்ள மீன் வளர்ச்சி கழக அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த கண்காணிப்பு குழுவை சேர்ந்த கிருஷ்ணன் என்பவர் ஜீப்பில் அமர்ந்திருந்த நிலையில் அவரைப் பிடித்து தரதரவென இழுத்துக் கொண்டு தன்னுடைய ஸ்கூட்டரில் இருந்த அரிவாளை எடுத்து அவரின் முதுகு மற்றும் பின்பகுதியில் வெட்டியதோடு கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது.

இந்த சம்பவம் அங்குள்ள சிசிடிவியில் பதிவான நிலையில் தற்போது வீடியோ காட்சிகள் வெளியாகி வைரலாகி வருகிறது. இது தொடர்பாக பவானிசாகர் மீன் வளர்ச்சி கழக துணை மேலாளர் ஆனந்தி, அலுவலக வளாகத்தில் நுழைந்து கொலை மிரட்டல் விடுத்த கணேஷ் குமார் மீது நடவடிக்கை எடுக்குமாறு பவானிசாகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் போலீசார் நேற்று கணேஷ் குமாரை கைது செய்தனர். இச்சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## பனை தொழிலாளியை எஸ்ஐ துப்பாக்கியால் சுட்ட சம்பவம் - தென்காசி துணை ஆட்சியர் அறிக்கை அளிக்க உத்தரவு



**மதுரை, ஏப்.30:** பனை தொழிலாளியை சார்பு ஆய்வாளர் துப்பாக்கியால் சுட்ட சம்பவம் தொடர்பாக விசாரிக்கும் தென்காசி துணை ஆட்சியர் விசாரணை அறிக்கை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தை அடுத்த மருதம்புத்தூரைச் சேர்ந்த பனை ஏறும் தொழிலாளி மணிகண்டன். இவர் பதநீருக்கு பதிலாக கள் இறக்குவதாக சந்தேகத்தின்பேரில் ஆலங்குளம் எஸ்ஐ இசக்கிராஜா ஆய்வு செய்ய வந்தார். அப்போது மணிகண்டனுக்கும் எஸ்ஐ-க்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் துப்பாக்கியால் சுட்டதில் மணிகண்டன் காயமடைந்தார்.

இதுகுறித்து அவரது தந்தை பெருமாள் சேட், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் எஸ்ஐ இசக்கிராஜா சாதிப் பெயரைச் சொல்லி திட்டியதாகவும் இந்த சம்பவம் தொடர்பாக உள்ளூர் போலீஸார் விசாரித்தால் நியாயம் கிடைக்காது என்றும் கூறி சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட கோரியிருந்தார்.

மனுவை விசாரித்த நீதிபதி புகழேந்தி, துப்பாக்கியால் சுட வேண்டிய அவசியம் என்ன எனக் கேட்டார். அரசுத் தரப்பில், துணை ஆட்சியர் வைஷ்ணவி பால் விசாரணை நடத்தி வருகிறார். விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கலாம் எனக் கூறப்பட்டது.

இதையடுத்து தென்காசி துணை ஆட்சியர் காணொலி மூலமாக ஆஜராகி, துப்பாக்கிச் சூடு நடந்த இடத்தில் முதல்கட்ட விசாரணை நடத்தியிருப்பதாகத் தெரிவித்தார். இதையடுத்து நீதிபதி, விசாரணையை முடித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு, வழக்கை ஜூன் 2-க்கு தள்ளிவைத்தார்.

## பாரிமுனையில் குடோனில் பதுக்கி வைத்திருந்த 400 கிலோ செம்மரக்கட்டைகள் பறிமுதல்: 3 பேர் கைது; உரிமையாளருக்கு வலை



**தண்டையார்பேட்டை, ஏப்.30:** பாரிமுனையில் குடோனில் பதுக்கிவைத்திருந்த 400 கிலோ செம்மரக்கட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக 3 பேரை போலீசார் கைது செய்தனர். தப்பிய உரிமையாளரை தேடி வருகின்றனர்.சென்னை பாரிமுனை கடற்கரை 4வது லைன் பகுதியில் செம்மரக்கட்டைகள் பதுக்கி வைத்திருப்பதாக வடக்கு கடற்கரை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. *RailFreight*

அதனடிப்படையில் நேற்று போலீசார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது, பாரிமுனையில் அப்துல் ரகுமான் என்பவருக்கு சொந்தமான குடோனில் நின்றுகொண்டிருந்த ஜீப்பை சோதனையிட்டபோது, அதில் 400 கிலோ செம்மரக்கட்டைகள் பதுக்கி வைத்திருந்தது தெரிய வந்தது, அதன்பேரில் ஜீப்பையும், செம்மரக்கட்டைகளையும் போலீசார் பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக சிவகங்கையை சேர்ந்த ஆனந்தன் அந்தோணி (29), மண்ணடியை சேர்ந்த செங்கிஸ்கான் (28), முகமது அசார் (30) ஆகிய 3 பேரை போலீசார் கைது செய்தனர். இதுகுறித்து வனத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர். அதன்படி சம்பவ இடத்துக்கு வந்த தேனாம்பேட்டை வனத்துறை அதிகாரிகளிடம் 3 பேரையும், 400 கிலோ செம்மரக்கட்டைகள் மற்றும் ஜீப்பை ஒப்படைத்தனர்.

தலைமறைவான குடோன் உரிமையாளர் அப்துல் ரகுமானை போலீசாரும், வனத்துறை அதிகாரிகளும் தேடி வருகின்றனர். மேலும் இவர்கள் எங்கிருந்து செம்மரக்கட்டைகளை கடத்தி வந்தார்கள்? கடத்தலில் யாருக்கெல்லாம் தொடர்பு உள்ளது என்பது குறித்து கியூ பிராஞ்ச் போலீசாரும் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் பாரிமுனை பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

## கோடை விழாவை முன்னிட்டு மே 1 முதல் உதகையில் போக்குவரத்து மாற்றம் செய்தது காவல்துறை



**நீலகிரி, ஏப்.30:** நீலகிரி மாவட்டத்தில் வரவிருக்கும் கோடைவிழாவினை முன்னிட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலன் கருதியும். போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும் வரும் 01.05.2026 முதல் போக்குவரத்தில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் காவல் துறைக்கு முழு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேட்டுப்பாளையத்திலிருந்து உதகைக்கு வரும் சுற்றுலா கார்கள் அனைத்தும் காட்டேரி சந்திப்பிலிருந்து இடதுபுறமாக திரும்பி சேலாஸ், கெந்தளா, காட்டேரிடேம்.கேத்திபாலாடா. கொல்லிமலை, லவ்டேல் வந்து மஞ்சனக்கொரை, பர்ன்ஹில் வழியாக உதகை நகருக்குள் வந்தடையலாம்.

மேட்டுப்பாளையத்திலிருந்து கூடலூர் மற்றும் தொப்பக்காடு செல்லும் சுற்றுலா பேருந்துகள், வேன், கார்கள் மற்றும் மேக்சிகேப் வாகனங்கள் அனைத்தும் லவ்டேல் ஜங்ஷனிலிருந்து இடதுபுறமாக திரும்பி லவ்டேல் ரயில்வே ஸ்டேசன், லவ்டேல் காவல் நிலைய சந்திப்பு. காந்திநகர், மஞ்சனக்கொரை, பர்ன்ஹில், காந்தள் முக்கோணம். பிங்கர்போஸ்ட் வழியாக கூடலூர் அனுப்பிவைக்கப்படும்.

குன்னூரிலிருந்து உதகைக்கு வரும் அனைத்து சுற்றுலா பேருந்து மற்றும் மேக்சிகேப் வாகனங்களும் ஆவின் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தப்படும். சுற்றுலா பயணிகள் அங்கிருந்து சுற்றுலா தலங்களுக்கு செல்ல அரசு சுற்றுப் பேருந்தை பயன் படுத்திக்கொள்ளலாம்.

கோத்தகிரியிலிருந்து உதகைக்கு வரும் அனைத்து சுற்றுலா பேருந்து மற்றும் மேக்சிகேப் வாகனங்களும் அரசு கலைக்கல்லூரி தற்காலிக வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தப்படும். சுற்றுலா பயணிகள் அங்கிருந்து சுற்றுலா தலங்களுக்கு செல்ல அரசு சுற்றுபேருந்தை பயன் படுத்திக் கொள்ளலாம்.

உதகையிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் அனைத்து சுற்றுலா வாகனங்களும் கோத்தகிரி வழியாக மட்டுமே செல்லவேண்டும் விடுப்பட்ட ஒரு சில வாகனங்கள் வெலிங்டன் பிளாக்பிரிட்ஜ். கட்டபெட்டு மற்றும் கோத்தகிரி வழியாக மேட்டுப்பாளையத்திற்கு திருப்பிவிடப்படும். எக்காரணத்தைக் கொண்டும் சுற்றுலா வாகனங்கள் குன்னூர் பர்லியார் வழியாக மேட்டுப்பாளையம் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

கூடலூரிலிருந்து உதகைக்கு வரும் அனைத்து சுற்றுலா பேருந்துகள் மற்றும் மேக்சிகேப் வாகனங்களும் எச்.பி.எப். கோல்ப் சாலைப் பகுதியில் நிறுத்தப்படும். சுற்றுலா பயணிகள் அங்கிருந்து சுற்றுலா தலங்களுக்கு செல்ல அரசு சுற்றுப் பேருந்தை பயன் படுத்திக்கொள்ளலாம்.

கூடலூரிலிருந்து தலைக்குந்தா வந்தடையும் இலகுரக சுற்றுலா வாகனங்கள் தலைகுந்தா மட்டம் கோழிப்பண்ணை புதுமந்து வழியாக ஸ்டிபன்சர்ச் வந்தடையும்.

01.05.2026 முதல் அத்தியாவசிய பொருட்கள் (பால், பெட்ரோலியம், சமையல் எரிவாயு) ஏற்றிவரும் வாகனங்கள் தவிர அனைத்து கனரக வாகனங்களும் காலை 0800 மணி முதல் இரவு 900 மணிவரை உதகை நகருக்குள் வர அனுமதி இல்லை.

## தண்ணீர் தேங்குதல், கொசு ஒழிப்பு குறித்த புகார்கள் மீது 48 மணிநேரத்தில் நடவடிக்கை

**தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு**



**சென்னை, ஏப்.30:** தண்ணீர் தேங்குவது, கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக அளிக்கப்படும் புகார்கள் மீது 48 மணி நேரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. *UrbanTransit*

சென்னையில் கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு தமிழக அரசுக்கும், சென்னை மாநகராட்சிக்கும் உத்தரவிட கோரி கோட்டூர்புரத்தைச் சேர்ந்த விஜயராஜா என்பவர் உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடர்ந்திருந்தார். அவரது மனுவில், கொசுக்கள் பெருக்கம் காரணமாக மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா போன்ற நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மழை நீர் வடிகால்கள், காலியிடங்கள், கட்டுமான பகுதிகளில் தேங்கியிருக்கும் நீரால் கொசுக்கள் அதிகளவில் உற்பத்தியாகி வருவதால் மழை நீர் வடிகால்கள் காலியிடங்கள் கட்டுமான பகுதிகளில் தேங்கியிருக்கும் நீரை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார். இந்த மனுவை விசாரித்த தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர், தண்ணீர் தேங்கும் மற்றும் கொசு உற்பத்தியாகும் பகுதிகளை அடையாளம் கண்டு நான்கு வாரங்களுக்குள் அனைத்து மாநகராட்சிகள், நராட்சிகள், பஞ்சாயத்துகளும் விரிவான ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து கட்டுமானப் பகுதிகளையும் தீவிரமாக கண்காணித்து, கட்டிட இடிபாடுகளை அகற்றி, தண்ணீர் தேங்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சுகாதார விதிகளை மீறும் கட்டுமான நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும். கொசு உற்பத்தி அதிகமுள்ள பகுதிகளில் தேங்கியிருக்கும் தண்ணீரை அகற்றுவது, கழிவு நீரை அப்புறப்படுத்துவது மற்றும் கொசு விரட்டும் புகைபோடும் நடவடிக்கை ஆகியவற்றை உறுதி செய்ய வேண்டும். தண்ணீர் தேங்கி இருப்பது குறித்தும், கொசு ஒழிப்பு நடவடிக்கை குறித்தும் புகார் தெரிவிக்க இலவச உதவி எண் உள்ளிட்ட குறைதீர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

உதவி எண்களில் அளிக்கப்படும் புகார்கள் மீது 48 மணி நேரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நடவடிக்கைகள் குறித்து விரிவான விழிப்புணர்வு பிரசாரங்களை அரசு மேற்கொள்ள வேண்டும். பொதுமக்களும் தங்கள் வீடுகளிலும், பூந்தொட்டிகள், மேற்கூரைகள் ஆகியவற்றிலும் தண்ணீர் தேங்காமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர். இந்த உத்தரவுகளை உடனடியாக அமல்படுத்தும் வகையில், இதன் நகலை தலைமை செயலாளர், சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பி வைக்குமாறு உயர் நீதிமன்ற பதிவுத் துறைக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

## தமிழகத்தில் மே 2 வரை வழக்கத்தை விட 3 டிகிரி வெப்பநிலை அதிகரிக்க வாய்ப்பு

**சென்னை, ஏப்.30:** தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இன்று முதல் மே 2-ம் தேதி வரை வெப்பநிலை இயல்பைவிட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, சென்னை வானிலை ஆய்வு மையத்தின் உயரதிகாரியும், விஞ்ஞானியுமான வி.ஆர். துரை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வடக்கு தெலங்கானா முதல் குமரிக்கடல் வரை 0.9 கி.மீ. உயரத்தில் உள் கர்நாடகா, ராயலசீமா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது. இதனால்,மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென்தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களின் கடலோரப்பகுதிகள், காரைக்கால் பகுதியில் ஓரிரு இடங்களில் இன்றும், நாளையும் (ஏப்.28,29) மிதான மழை பெய்யும். ஏனைய தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்காலில் ஒரு சில இடங்களில் ஏப்.30-ம் தேதி முதல் மே 2-ம் தேதி வரை இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஏப்.30-ம் தேதி நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 6 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

மே 1, 2 ஆகிய தேதிகளில் நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும்.

மே 3, 4-ல் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

அதிகபட்ச வெப்பநிலை: இன்று முதல் மே 2-ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஒரு சில இடங்களில் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும்.

மேற்படி நாட்களில் வெப்பநிலையும், ஈரப்பதமும் அதிகரிக்கும் நிலையில், கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் அசவுகரியம் ஏற்படலாம்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்றும், நாளையும் (ஏப்.28,29) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

அதிகபட்ச வெப்பநிலை 38 முதல் 39 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். வெப்பநிலையும், ஈரப்பதமும் அதிகரிக்கும் நிலையில், அசௌகரியம் ஏற்படலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்

# கள் விவகாரம்: விவசாயி மீதான போலீஸ் துப்பாக்கி சூடு குறித்து சப்-கலெக்டர் ஆஜராகி விளக்கம்



**மதுரை, ஏப்.30:** தென்காசி மாவட்டம் மருதம்புத்தூரை சேர்ந்த பெருமாள் சேட் என்பவர், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:-

என் மகன் மணிகண்டன் விவசாயி ஆவார். கடந்த 7-ந்தேதி எங்கள் தோட்டத்தில் இருந்தேன். அப்போது எனது மகன் மணிகண்டனுடன் சீருடை அணியாத ஆலங்குளம் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் இசக்கி ராஜா உள்ளிட்ட சில போலீசார் வந்தனர். அவர்கள் எங்கள் தோட்டத்தில் இருந்த பனையில் கள் இறக்கப்படுகிறதா? என்று சோதனை செய்தனர். அதை பார்த்து நானும், என்னுடன் இருந்த பேரன், பேத்திகளும் அங்கு சென்றோம்.

அப்போது என்னையும், பேரக்குழந்தைகளையும் சப்-இன்ஸ் பெக்டர் இசக்கி ராஜா ஆபாச வார்த்தைகளால் திட்டினார். இதனை என் மகன் மணிகண்டன் தட்டிக்கேட்டார். அப்போது அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. உடனே இசக்கிராஜா துப்பாக்கியை எடுத்து மணிகண்டனின் காலில் சுட்டார்.

இதுகுறித்த புகாரின்பேரில் ஆலங்குளம் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். முறையாக விசாரிக்கவில்லை. சப்-இன்ஸ்பெக் டர் இசக்கி ராஜா மீதான வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார். இந்தவழக்கை ஏற்கனவே விசாரித்த ஐகோர்ட்டு, இந்த மனு நிலுவையில் இருக்கும் வரை துப்பாக்கி சூடு வழக்கில் எந்த மேல் நடவடிக்கையும் கூடாது என உத்தரவிட்டது.

இந்தநிலையில் இந்த வழக்கு நீதிபதி புகழேந்தி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு வக்கீல் செந்தில்குமார் ஆஜராகி, தென்காசி அருகே விற்கப்பட்ட கள் எங்கிருந்து கிடைத்தது என போலீ சார் விசாரித்துள்ளனர். அது தொடர்பாக மனுதாரர் மகனையும் போலீசார் விசாரித்து இருக்கிறார்கள். மனுதாரர் மகன் போலீசாரை தாக்கியுள்ளார். இதனால் தற்காப்புக்காக போலீசார், மணிகண்டனை துப்பாக்கியால் சுட்டனர். இது தொடர் பாக சப்-கலெக்டர் விசாரணை நடத்தி வருகிறார். அதன் அறிக்கை கிடைத்த பின்புதான் முழுமையான விவரம் தெரிய வரும் என்றார்.

இதையடுத்து சப்-கலெக்டரை வீடியோ கான்பரன்சிங் (காணொலி) முறையில் ஆஜராகும்படி நீதிபதி உத்தரவிட்டார். அதன்படி சிறிது நேரத்தில் சப்-கலெக்டர் நீதிபதி முன்பாக ஆஜரானார்., விவசாயியை துப்பாக்கியால் போலீசார் சுட்ட விவகாரம் தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது என்று தெரிவித்தார். இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதி, சப்-கலெக்டரின் விசாரணை முடிந்து அதன் அறிக்கையை பெற்ற பின்பு மேல் விசாரணை நடத்தப்படும் என்று தெரிவித்து, இந்த வழக்கை ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

# சந்தன கடத்தல் வீரப்பன் படத்துடன் டிஜிட்டல் போர்டு வைத்தவர் மீது போலீசார் வழக்கு பதிவு



**திருவாரூர், ஏப்.30:** திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை அடுத்த ஓவரூர் கிராமம் வெள்ளகுளத்தெரு மாரியம்மன் கோவிலுக்கு செல்லும் சாலையில் வெள்ளங்கால் காளியமான் கோவில் விழாவுக்காக பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்த உறுப்பினர் வெள்ளங்கால் கிராமத்தை சேர்ந்த சுப்பிரமணியன் மகன் சின்னமுத்து(36) என்பவர் ஒரு டிஜிட்டல் போர்டு வைத்திருந்தார்.

அந்த போர்டில் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சந்தன கடத்தல் மன்னன் வீரப்பன் படம் போட்டு "பாசத்துக்கு பஞ்சமில்லை, பஞ்சாயத்துக்கு பயமில்லை" என வாசகம் போடப்பட்டு இருந்தது. இதனால் கிராமத்தில் அதிர்ப்தியும் பரபரப்பும் ஏற்பட்டது.

இதனையடுத்து எடையூர் சப். இன்ஸ்பெக்டர் விஜயகுமார் மற்றும் போலீசார் சம்பந்தப்பட்ட டிஜிட்டல் போர்டை அகற்றியதுடன் சம்பவ இடத்தில் அனுமதியின்றி விளம்பர போர்டு வைத்ததாக சின்னமுத்து மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மே-2 முதல் காவலர்கள் விடுப்பு எடுக்க கூடாது - தமிழக டிஜிபி உத்தரவு

**சென்னை, ஏப்.30:** தமிழக சட்டமன்ற தேர்தல் கடந்த 23-ந்தேதி நடைபெற்றது. இதன் வாக்கு எண்ணிக்கை வருகிற மே 4-ந்தேதி நடைபெற உள்ளது. இந்நிலையில், மே 2 ஆம் தேதி முதல் மறு உத்தரவு வரும் வரை அதிகாரிகள் முதல் காவலர்கள் வரை யாரும் விடுப்பு எடுக்கக்கூடாது என தமிழக டிஜிபி உத்தரவு விட்டுள்ளார்.

இதன்படி, தற்போது விடுப்பில் உள்ள காவலர்களும் மே 2ஆம் தேதி முதல் விடுப்பை நீட்டிக்கக்கூடாது எனவும் மகப்பேறு விடுப்பு, குழந்தை பராமரிப்பு விடுப்பு, கல்வி விடுப்பு மற்றும் மருத்துவ விடுப்பில் இருப்பவர்களுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவுறுத்தல், களப்பிரிவுகள் மற்றும் சிறப்புப் பிரிவுகளில் பணிபுரியும் அனைத்து அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மே தினத்தில் மதுபானம் விற்பனை செய்யக்கூடாது: மாவட்ட ஆட்சியர் உத்தரவு




**சென்னை, ஏப்.30:** மே தினத்தையொட்டி வரும் 1-ம் தேதியன்று, சென்னை மாவட்டத்தில் மதுபானம் விற்பனை செய்யக்கூடாது, மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மே தினம் வரும் வெள்ளிக்கிழமை (மே 1) கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு சென்னை மாவட்டத்தில் மே தினத்தன்று மதுபானம் விற்பனை செய்யக்கூடாது.

தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை விதிகள் மற்றும் தமிழ்நாடு மதுபான உரிமம் மற்றும் அனுமதி விதிகள் ஆகியவற்றின் கீழ், சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக், மதுபான சில்லறை விற்பனை கடைகள் மற்றும் பார்கள், உரிமம் பெற்ற கிளப் பார்கள், ஹோட்டல் பார்கள், மதுபான விற்பனையகங்கள், மதுபானக் கூடங்கள் அனைத்தும் அன்றைய தினம் இயங்கக்கூடாது.

கண்டிப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும். இந்த உத்தரவை மீறி மது விற்பனையில் ஈடுபட்டால், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

# காஸ் சிலிண்டர் விநியோக காத்திருப்பு காலம் குறைப்பு: எண்ணெய் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் தகவல்

**சென்னை, ஏப்.30:** பெரும்பாலான பகுதிகளில் காஸ் சிலிண்டர் விநியோகத்துக்கான காத்திருப்புக் காலம் 5 நாட்களுக்கும் குறைவாக மாற்றப்பட்டுள்ளது.

விநியோக கால அளவை மேலும் குறைக்க தேவையான நடவடிக்கைஎடுக்கப்படுவதாக தமிழகம் மற்றும் புதுச்சேரி எண்ணெய் நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் வி.சி. அசோகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழகம் மற்றும் புதுச்சேரி முழுவதும் எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்களான ஐஓசி, பிபிசி, எச்பிசி பெட்ரோல் பங்குகளில் பெட்ரோல் மற்றும் டீசல் போதுமான அளவில் கிடைக்கின்றன.

எந்தவித பதற்றமும் தேவையில்லை.எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் முதல் முனையங்கள், கிடங்குகள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் வரை முழு விநியோகச் சங்கிலியும் தடையின்றிச் செயல்படுகிறது.



மாநிலம் முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசல் இருப்பு நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, தடையின்றி விநியோகம் உறுதி செய்யப்படுகிறது.

எண்ணெய்சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் (ஐஓசி, பிபிசி, எச்பிசி) தமிழகம் முழுவதும் உள்நாட்டு எல்பிஜி விநியோகத்தையும் தடையின்றி மேற்கொண்டு வருகின்றன.

எண்ணெய்சந்தைப்படுத்தும் நிறுவனங்களின் தொடர் முயற்சி, தமிழக அரசின் தீவிரக் கண்காணிப்பு ஆகியவற்றால், பெரும்பாலான பகுதிகளில் எல்பிஜி சிலிண்டர் விநியோகத்துக்கான காத்திருப்புக் காலம் 5 நாட்களுக்கும் குறைவாக மாற்றப்பட்டுள்ளது.

விநியோகத்துக்கான கால அளவை மேலும் குறைப்பதற்கான அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எண்ணெய் விற்பனை நிறுவனங்களின் பங்குகளில் ஆட்டோ எல்பிஜி போதுமான இருப்பு உள்ளது. ஆட்டோ எல்பிஜி தடையின்றி கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. இதற்காக கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது.

இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

# மதுரை சித்திரை திருவிழா தேரோட்டம் கோலாகலம்: மாசி வீதிகளில் திரண்ட லட்சக்கணக்கான பக்தர்கள்



**மதுரை, ஏப்.30:** மதுரை சித்திரை திருவிழாசைவமும், வைணவமும் சங்கமிக்கும் விழாவாக நடந்துவரும் மதுரை சித்திரை திருவிழா உலகப்புகழ் பெற்றதாகும். மதுரை மீனாட்சி அம்மன் கோவில் மற்றும் மதுரையை அடுத்த அழகர் கோவிலில் நடைபெறும் சித்திரை விழாக்கள் இணைந்த விழாவாக இந்த பெருவிழா நடந்து வருகிறது. மீனாட்சி அம்மன் கோவிலில் இந்த ஆண்டுக்கான சித்திரை திருவிழா கடந்த 19-ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் மீனாட்சி அம்மனும், பிரியாவிடை அம்மனுடன் சுந்தரேசுவரரும் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி மதுரை மாசி வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்

மீனாட்சி அம்மன் மதுரை மாநகரின் ஆட்சி பொறுப்பேற்கும் விதமாககடந்த 26-ந் தேதி பட்டாபிஷேகம் சூட்டப்பட்டது. தொடர்ந்து, சிவபெருமானை அம்மன் போருக்கு அழைத்த நிகழ்வான திக்கு விஜயம் நேற்று முன்தினம் நடைபெற்றது. விழாவின் சிகர நிகழ்ச்சியான மீனாட்சி அம்மன்-சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் நேற்று காலை கோலாகலமாக நடைபெற்றது.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழாவின் 11-ம் நாளான இன்று (புதன்கிழமை) மாசி வீதிகளில் தேரோட்டம் நடைபெறுகிறது. இதையொட்டி அதிகாலை 5 மணிக்கு மேல் சுந்தரேசுவரர், பிரியாவிடை அம்மன் பெரிய தேரிலும், மீனாட்சி அம்மன் சிறிய தேரிலும் எழுந்தருளினர். காலை 6 மணியளவில் பக்தர்கள் வடம் பிடித்து இழுக்க தேரோட்டம் தொடங்கியது. சங்கு முழங்கியபடியும், இசை வாத்தியங்கள் முழங்கியபடியும், அரகரா சிவசிவா முழக்கத்துடனும் தேரை பக்தர்கள் இழுத்து வருகின்றனர்.

பெரிய தேருக்கு முன்பாக அலங்கரிக்கப்பட்ட யானை முன்னால் செல்கிறது. தொடர்ந்து, முருகப்பெருமானும், விநாயகர் பெருமானும், நாயன்மார்களும் அலங்கரிக்கப்பட்ட சப்பரங்களில் செல்கின்றனர். அசைந்து வரும் தேரை காண்பதற்காக மாசி வீதிகளில் லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளனர். தேரோட்டத்தையொட்டி, மாசி வீதிகளில் போலீசார் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மீனாட்சி அம்மன் கோவில் சித்திரை திருவிழா நிறைவடையும் நிலையில், அழகர் கோவிலில் இருந்து கள்ளழகர் இன்று மாலையில் அதிர்வெட்டுகள் முழங்க மதுரைக்கு புறப்படுகிறார். வழிநெடுக சுமார் 500 மண்டகப்படிகளில் எழுந்தருளும் அழகருக்கு நாளை (30-ந் தேதி) மதுரை மூன்றுமாவடியில் பக்தர்கள் வெள்ளமென திரண்டு வரவேற்கும் எதிர்சேவை நடக்கிறது. விழாவின் முத்தாய்ப்பு நிகழ்ச்சியாக நாளை மறுநாள் (1-ந் தேதி) அதிகாலையில் தங்கக்குதிரை வாகனத்தில் வீற்றிருந்து வைகை ஆற்றில் கள்ளழகர் இறங்குகிறார். இந்த பக்தி பரவசக்காட்சியை காண, தமிழகம் முழுவதிலும் மட்டுமின்றி வெளி மாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்தும் பல லட்சம் பக்தர்கள் மதுரையில் வந்து குவிந்த வண்ணம் உள்ளனர்.




# தேனிசை செல்லப்பா மறைவு: தமிழத்தேசியத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பு - திருமாவளவன்

**சென்னை, ஏப்.30:** விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்த்தேசிய பாடகர் தேனிசை செல்லப்பா இன்று காலமானார் என்கிற செய்தியறிந்து அதிர்ச்சியும் வேதனையுமடைந்தேன். தமிழ்த்தேசிய விடுதலைக் களத்தில் தனது எழுச்சிப் பாடல்களின் மூலம் பெரும்பங்காற்றிய தேனிசை செல்லப்பாவுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் எமது செம்மாந்த வீரவணக்கத்தை செலுத்துகிறோம்!

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி அருகே சிங்கிலிப்பட்டி என்னும் கிராமத்தைச் சார்ந்த செல்லப்பா, தொடக்ககாலத்தில் திராவிடர் கழகத்தின் மேடைகளிலும் பின்னர் சி.பா.ஆதித்தனாரின் நாம் தமிழர் கட்சியின் மேடைகளிலும் பாடிவந்தார். பின்னர் தமிழ்த்தேசியக் களத்தில் ஈடுபாடு கொண்டு தமிழீழ விடுதலைக்கான பாடல்களை இயற்றி பாடினார். அவரது பாடல்கள் எளிய மக்களை ஈர்க்கும் வகையில் இருந்தது.

கலை நிகழ்வுகளின் மூலமாக தமிழ்த்தேசிய அரசியலை தனது இசையின் மூலமாக வெகுமக்களிடம் கொண்டு சேர்க்க முடியும் என்பதை நிறுவியவர். தமிழீழத் தேசிய விடுதலைக் களத்தில் இவரது பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையில் அண்ணன் மேதகு பிரபாகரன் 'பாசறைப் பாணர்' என்னும் பட்டத்தை இவருக்கு வழங்கி சிறப்பித்தார்.

என் மீதும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மீதும் கொண்ட பற்றுதலால் விடுதலைச் சிறுத்தைகளுக்காக அவரே பல பாடலை இயற்றி இசையமைத்துப் பாடியுள்ளார். தனது எழுச்சிமிகு குரல்வளத்தால் உலகத்தமிழர்களிடையே தமிழ்த் தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்திய தேனிசை செல்லப்பா, கடந்த சில ஆண்டுகளாக உடல் நலம் சீராக இல்லாமையினால் மேடைகளில் பாடாமல் ஓய்வு எடுத்து வந்தார். எனினும், கடந்த 2024-ம் ஆண்டு விசிக தலைமையகமான அம்பேத்கர் திடலில் நடைபெற்ற "மாவீரர் நாள்" நிகழ்ச்சியில் பங்கேற்று தமிழ்த்தேசிய பாடல்களை எழுச்சியுடன் பாடினார். அதுவே அவர் பாடிய கடைசி மேடையாகவும் அமைந்தது.

தமிழ்த்தேசிய பாடகர் தேனிசை செல்லப்பாவின் இழப்பு தமிழ்த்தேசியத்திற்கு பேரிழப்பு! அவரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்! சென்னை அருகே படப்பையில் நடைபெறும் அவரது நல்லடக்க நிகழ்வில் விடுதலைச் சிறுத்தைகள் பெருந்திரளாக பங்கேற்று வீரவணக்கம் செலுத்திட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# காவிரி மேலாண்மை ஆணையக் கூட்ட அறிவிப்பு சூழ்ச்சியா? - சீமான் சரமாரி கேள்வி

**சென்னை, ஏப்.30:** தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா ஆகிய மூன்று மாநிலத் தேர்தல் முடிவுகள் வெளிவந்து, புதிய அரசுகள் அமைந்த பிறகே காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தை கூட்ட வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டம் 29.04.2026 அன்று நடைபெறும் என்று அறிவித்து இருப்பது பெரும் அதிர்ச்சியளிக்கிறது. தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா ஆகிய மூன்று மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெற்று, தேர்தல் முடிவுகள் இன்னும் வெளிவராத நிலையில் கூட்டத்தை நடத்த காவிரி மேலாண்மை ஆணையம் முயல்வது வன்மையான கண்டனத்துக்குரியது.

காவிரி ஆற்றினை பங்குகொள்ளும் மூன்று முக்கிய மாநிலங்களிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் இன்னும் அமையாத நிர்வாகச் சூழலில், காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தை அவசர அவசரமாக கூட்ட வேண்டிய அவசியம் என்ன வந்தது? முழுமையான அதிகாரம் பெறாத அரசுகளால் எப்படி முக்கிய முடிவுகளை எடுக்க முடியும்?

மாநிலங்களின் உயர் அதிகாரிகள் வேற்று மாநிலங்களை சேர்ந்தவர்களாக இருக்கும் சூழலில் மண்ணின் உரிமைகளையும், மக்களின் உணர்வுகளையும் எப்படி உரத்து எழுப்புவார்கள்?

நடைபெறவுள்ள கூட்டத்தில் மேகதாது அணை கட்டுமானம் குறித்த முக்கிய விவாதங்கள் நடைபெறவுள்ள நிலையில், இதர மூன்று மாநிலங்களில் அதிகாரம் படைத்த அரசுகள் இல்லாத நிலையில், கூட்டம் முழுக்க முழுக்க ஒருபக்க சார்பாக மாறி கர்நாடகாவுக்கு சாதகமாகிவிடாதா?

யாருடைய உத்தரவின் பேரில் இத்தனை அவசரமாக காவிரி மேலாண்மை ஆணையம் கூட்டப்படுகிறது? யாருடைய நலனுக்காக இத்தனை அவசரமாக ஆணையக் கூட்டம் நடைபெறுகிறது?

தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்க, கர்நாடக மாநிலத்தை ஆளும் காங்கிரஸ் அரசு மற்றும் இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசின் கூட்டுச் சூழச்சியாகவே இக்கூட்டம் நடத்தப்படுவதாக தோன்றுகிறது. கச்சத்தீவு போன்று தமிழ்நாட்டின் உரிமைகளை பறிக்கும் இத்தகைய வரலாற்றுச் சதிகளை இனியும் அனுமதிக்க முடியாது.

ஆகவே, தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா ஆகிய மூன்று மாநிலத் தேர்தல் முடிவுகள் வெளிவந்து, புதிய அரசுகள் அமைந்த பிறகே காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தை கூட்ட வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# 200 தொகுதிகளை தவெக வெல்லும் என்பதெல்லாம் ஓவர் சத்தம் மே 4ம் தேதி வரை கனவு கண்டு கொள்ளட்டும்: தமிழிசை கிண்டல்

**சென்னை, ஏப்.30:** பாஜ மூத்த தலைவர் தமிழிசை நேற்று சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி: தேசிய ஜனநாயக கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும். அதில் எந்த சந்தேகமும் இல்லை. தமிழக வெற்றி கழகம் கட்சி தலைவர் விஜய் ஒரு நல்ல நடிகராக இருக்கலாம். ஆனால் அதற்காக, குழந்தைகளை பெற்றோரிடம் அடம் பிடித்து, தனக்கு வாக்களிக்க வேண்டும் என்று வற்புறுத்த கூறுவதெல்லாம் தவறு. குழந்தைகளை பிரசாரத்திற்கு பயன்படுத்தக் கூடாது என்பது ஒரு விதியாக இருக்கும்பொழுது, அவர் கூறியது குழந்தைகளின் மனதில் ஒரு தவறான கருத்தை விதைப்பது போல் ஆகிவிடும். குழந்தைகள் படிக்க வேண்டும், அவர்களின் எதிர்காலத்தை பற்றி சிந்திக்க வேண்டும், அதைவிடுத்து இதைபோல் செயல்படுவது, குழந்தைகளின் எதிர்காலம் பாதிக்கப்படும் என்பதை, தம்பி விஜய் உணர வேண்டும்.

விஜய் செய்வது அனைத்தும், சுயநல அரசியலை நோக்கி சென்று கொண்டிருக்கிறதோ? என பயமாக இருக்கிறது. தமிழக வெற்றிக் கழகம் கட்சித் தலைவர் விஜய் தேர்தலுக்கு முன்னால் தான் எந்த அடையாளத்தையும் காண்பிக்க மாட்டேன் என்று இருந்த நிலையில், தேர்தலுக்குப் பின்பு தற்போது, சில அடையாளங்களை காண்பிக்கிறார். இறைவனை அனைவரும் கும்பிடலாம். அது ஆரோக்கியம் தான். ஆன்மிக பயணத்தை நான் என்றும் குற்றம் சொல்ல மாட்டேன், நடிகர் விஜய் தற்போது வெளிப்படையாக சாமி கும்பிடுகிறார்.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM